# சுதந்திரன்

SUTANTIRAN

தொலைபேசி: 23411 | விலை சதம் 25

வள்ளுவர் ஆண்டு 2004, தை 29உ (11—2—73) ஞாயிறு முறை 7 | புத்தகம் 26 இதழ் 10




## சாகாத சரித்திரம்

—கவிஞர் கண்ணதாசன்—

போயினன் என்றவன் புகழ்பாடும் வேளையிலே
போகவில்லை என்பது போல் பொருள்தோற்றம்
தோன்றுவதேன்?
இறந்துவிட்டான் என்றவனை எண்ணுங்கால் இல்லை இல்லை
இறக்கவில்லையென்பது போல் எண்ணங்கள் ஊறுவதேன்?
பொய்யுடம்புபோகப் புகழுடம்பு நிற்பதிலும்
மெய்யுடம்பு போல விரைந்து வரும் காட்சியென்ன?
பொன்னரும்பு மீசை என்ன; புன்னகைக்கும் இதழ்கள்
என்ன
தன்னிகரே இல்லை எனத் தடங்காட்டும் வெற்றியென்ன
இறந்திருக்கும் சட்டை என்ன; தெளிவார்ந்த கண்கள்
என்ன
அறம் பிறழாதிருந்ததனால் அமைதி மிக்க சாயலென்ன?
காட்சியிலே நிற்கின்றான், கலையேபோல் தோன்றுகின்றான்
ஆட்சியிலே தம்பியரை, அரசாட்சிசெய்கின்றான்
அவனுக்கா மரணம் வரும். அறியாமல் அழுதுவிட்டோம்!
கனியிருக்கும் மாமரத்தை, கவின் மிகுந்த ஓவியத்தை
கட்டோடு கொண்டு செல்லக் காலனுக்கும சக்தியில்லை—
ஓவியங்களெல்லாம் உயிரிழந்துபோகுமென்றால்
காவியங்களெல்லாம் கலல படிந்து வேகுமென்றால்
கோவிற்சிலைகளெல்லாம் கோலமின்றிச் சாகுமென்றால்
ஆவி ஒன்று போனதனால் அவனும் இறந்தவன்தான்!
மேகங்கள் உள்ளவரை, விண்மீன்கள் தோன்றும் வரை
ராகங்கள், தாளங்கள், நல்லிசைகள உள்ள வரை
அண்ணா எனும் பெயரும் அவனுரைத்த பொன்மொழியும்
கண்ணாகவாழும்—அவை காலத்தால் மறைவதில்லை.

# தமிழர் வரலாறு இருட்டடிப்பு!

## இலங்கையை பௌத்த சிங்கள நாடாகக் காட்ட முயற்சி!

### நினைவுத்தூண் நிறுவுவதில் பெரும் அநீதி!

### தொல் பொருளாய்வுத்துறையின் சூழ்ச்சி!

ஈழத்தமிழர் வரலாற்றை இருட்டடிப்பு செய்து இலங்கையை ஒரு தனி பௌத்த சிங்கள நாடாக படம் பிடித்துக்காட்டும் வேலையில் தொல்பொருள் ஆய்வுக் குழுவினர் தீவிரமாக இறங்கியுள்ளனர்.

சிங்களவர்களின் மூதாதையான விஜயன் இலங்கையில் காலடி வைப்பதற்கு முன்னிருந்தே இந்நாட்டில் வாழ்ந்துவரும் தொல்பெருங்குடி மக்களான தமிழர்களின் பழம்பெரும் வரலாற்றை உருமாற்றியும், திசைதிருப்பியும் இருட்டடிப்பு செய்தும், இலங்கையை ஒரு சர்வ பௌத்த சிங்கள நாடாக வெளியுலகத்துக்கு எடுத்துக் காட்டுவதில் சிங்கள ஆட்சி மும்முரமாக ஈடுபட்டுள்ளது தெரிந்ததே.

இந்த வரலாற்றுக்கொலைக்கு-வரலாற்று இருட்டடிப்புக்கு பக்கபலமாக தொல்பொருள் ஆய்வுத்துறையினரும் இருந்துவருவதாக தமிழ் மக்கள் குற்றம் சுமத்துகிறார்கள். தொல்பொருள் ஆய்வுத்துறையினரின்

(10ம் பக்கம் பார்க்க)

## யாழ் நகரில் அண்ணா நினைவாஞ்சலி!

பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு நினைவு அஞ்சலி செலுத்து முகமாக திருக்குறள் முன்னணிக்கழகம் யாழ் வீரசிங்கம மண்டபத்தில் 10—2—72 மாலை 6 மணிக்கு பொதுக் கூட்டம் ஒன்றை நடத்துகிறது. மாவை—சேனாதிராசா தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் நாவலர் அமிர்தலிங்கம், மு. சிவசிதம்பரம், வி. என். நவரத்தினம் மயிலை சிவசண்முகதாசன் உட்பட பலர் உரையாற்றுவர். விழா இறுதியில் கவிஞர் கந்தவனம் தலைமையில் நடைபெறும் கவியரங்கில், கவிஞர்கள் காரை—சுந்தரம்பிள்ளை, முத்துசிவன், கலியுகன், அய்யாத்துரை மு. ஆலாலசுந்தரம் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

## வடக்கு, கிழக்கில் சிங்களக் குடியேற்றம்!

வடக்கு, கிழக்குமாகாணங்களில் போதியளவு விவசாய நிலம் இருப்பதாகவும், ஆகவே அங்கு காணியில்லாத சிங்கள மக்களைகுடியேற்ற வேண்டுமென்றும் வடபிரதேசத்துக்கு மகாவலி கங்கையை திருப்பும் அதே வேளையில் அங்கு சிங்களவர்களும் குடியேற்றப்படுவார்கள் என்றும் தேசியபேரவையில் 7. 2. 73ல் பேசிய ஆளுங்கட்சியைச்சேர்ந்த ஹேரா ஹெட்ட பா. உ. திரு. பியசேன தென்னக்கூன் தெரிவித்துள்ளார்.

## பொறியியல் பீடத்துக்கு 275க்கு 32 தமிழர்தானா?

### யாழ் பெற்றோர் சங்கம் கண்டனம்!

பல்கலைக் கழகங்களுக்கு—குறிப்பாக பொறியியல் மருத்துவம், விஞ்ஞானம் போன்ற துறைகளுக்கு—இந்த ஆண்டு மாணவர்கள் எந்த அடிப்படையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்பதை தெரிவிக்கும்படி கல்வியமைச்சரிடம் யாழ் பெற்றோர் சங்கம் கோரியுள்ளது.

இது சம்பந்தமாக பெற்றோர் சங்கம் நிறைவேற்றியுள்ள தீர்மானம் வருமாறு:

(7-ம் பக்கம் பார்க்க)

## தமிழே போதனாமொழி! பெற்றோர் தீர்மானம்

புத்தூர் மஞ்சு சிக பாடசாலையின் போதனா மொழி தமிழாகவே இருக்கவேண்டுமென்றும் சைவசமயம் கட்டாய பாடமாகப் போதிக்கப்படவேண்டும் என்றும் மேற்படி பாடசாலையின் பெற்றோர் சங்கக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது!

சிங்களத்தை தமது பிள்ளைகளின் போதனாமொழி ஆக்கியதையும், பௌத்தத்தை கட்டாய பாடமாக்கியதையும் பல பெற்றோர் கடுமையாக எதிர்த்துப் பேசினர்.

# போதனாமொழியாகச் சிங்களத்தை திணிப்பதற்கு தமிழரசுக்கட்சி எதிர்ப்பு!

## தனிப்பாடசாலை நடத்தத் தீர்மானம்!

## தீவிர நடவடிக்கைக்கு வற்புறுத்து!

4-2-73 யாழ்ப்பாணத்தில் உள்ள தலைமைப் பணிமனையில் கூடிய இலங்கைத் தமிழரசுக்கட்சியின் மத்திய செயற்குழு பின்வரும் தீர்மானங்களை ஏகமனதாக நிறைவேற்றியது.

### தீர்மானம்—1

முன் தீர்மானித்தபடி கட்சியின் மாநாட்டை கிளிநொச்சியில் மே மாதத்தில் நடாத்துவதென்றும், தமிழர் கூட்டணிப் பிரமுகர்களையும் பேச்சாளர்களாக அழைப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது. மாநாட்டின் திகதியை வரவேற்புக் குழுவினருடன் கலந்து ஆலோசித்து முடிவுசெய்வது.

### தீர்மானம்—2

அரசாங்கம் 13 தோட்டங்களை சமீபத்தில கையேற்றதால் எழுந்துள்ள நிலைபற்றி ஆராய்ந்து கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

"ஒரு சோசலிச சமுதாயத்தை உருவாக்குவதற்காக தேயிலை, ரப்பர் தோட்டங்களை தேசியமயமாக்குவதை இலங்கைத் தமிழரசுக்கட்சி வரவேற்கும் [illegible] நேரத்தில் பாரபட்சமான முறையில் ஒருசில தோட்டங்களை மாத்திரம் சுவீகரித்ததையும் அவற்றில் வேலை செய்துவந்த தமிழ் ஊழியர்களையும் தொழிலாளர்களையும் வீடற்றவர்களாகவும் தொழிலற்றவர்களாகவும், இதுவரை அனுபவித்துவந்த வைத்திய, கல்வி உரிமைகள் இழந்தவர்களாகவும் ஆக்கும் அநீதியை செயற்குழு வன்மையாகக் கண்டித்து இதுபற்றி வேண்டிய நடவடிக்கையை எடுக்குமாறு தமிழர் கூட்டணியின் [illegible]

## தமிழ் நாவல் இலக்கியத்துறையில் ஒரு புதுமை-ஒரு புரட்சி!

சிறந்த தமிழ் நாவல்களைத் தருவதில் முன்னணியில் நிற்கும் சுதந்திரனில் விரைவில் தொடங்குகிறது—புத்தம்புது சமூக நாவல்

# 'ராதையின் நெஞ்சம்'

புதுமை நிறைந்தது—உள்ளத்தை உருக்கும் உணர்ச்சிமயமான சம்பவங்கள்—திடுக்கிடவைக்கும் திருப்பங்கள் நிறைந்த ஓர் உண்மைக்காவியம்!

தமிழ் ஈழத்தின் தலைசிறந்த இலக்கிய கர்த்தா படைக்கிறார்!

ஆரம்பமாகும் தேதி அடுத்த வாரம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைவாழ் தமிழ்பேசும் மக்களின் உரிமைக்குரல்



க. முத்துவேலு,
வெள்ளவத்தை.

கே: இலங்கையில் வெளியிடப்படும் சஞ்சிகைகளுள் அதிக விற்பனையையும், அதிக வாசகர்களையும் கொண்ட சஞ்சிகை 'வெள்ளி' என்பதில் ஐயமில்லை. 'வெள்ளி' அதிகம் விற்பனையாவதற்கும், சுந்தரி, குமரன் போன்றவை வேண்டுவாரற்று, வாசகர் தொகை அற்றுக் காட்சிப் பொருளாகத் தூங்குவதற்கும் காரணம் என்னவாக இருக்கலாம்?

ப: வெள்ளி, தமிழ் மக்களின் அபிலாஷைகளையும் உணர்ச்சியையும் பிரதிபலிக்கிறது — சுந்தரி, குமரன் போன்றவை சிங்கள முதலாளிகளினதும் சீனத் தலைவர்களினதும் அபிலாஷைகளை பிரதிபலிக்கின்றன — இதுதான் காரணம்!

ஃ

கி. கேசவன்,
கிரான்குளம்,
மட்டக்களப்பு.

கே: தமிழர் கூட்டணியினரின் முக்கிய குறிக்கோள் என்ன?

ப: தமிழினத்தின் பூரண சுதந்திரத்தை நிலைநாட்டுவது!

கே: தமிழ் நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் பூகம்பத்தையிட்டு உங்கள் எண்ணம் என்ன?

ப: எந்தப் பூகம்பமும் அறிஞர் அண்ணாவால் தமிழகத்தில் தூவப்பட்ட இனமொழி விடுதலைஉணர்ச்சிகளை அடித்துச் செல்ல முடியாது என்பதே எனது கருத்து!

ஃ

சபா. நாராயணன்,
கனகபுரம,
கிளிநொச்சி.

கே: உலகில் உயர்வானது எது? தாழ்வானது எது?

ப: உயர்வானதும் உள்ளம் தான்— தாழ்வானதும் உள்ளம்தான்!

ஃ

டி. கனகரத்தினம்,
நொச்சிக்குளம்.
நெடுங்கேணி.

கே: நடிகர்திலகம் சிவாஜி கணேசன் இதுவரையில் எத்தனை படங்களில் நடித்திருக்கின்றார்? எந்த நடிகையுடன் அதிகமாக அவர் நடித்திருக்கின்றார்?

ப: இத்தகைய கேள்விகளுக்குப் பதில் சொல்லுவதற்கென்றே இந்நாட்டில் வேறு சில பத்திரிகைகள் இருக்கின்றன. அவைற்றுக்கு எழுதி கேளுங்கள். சிவாஜி கணேசன் தமிழ் நாட்டின் நவநடிகர். அவ்வளவுதான் எனக்குத் தெரியும்!

ஃ

ஜெயா சூரி,
மாதகல்.

கே: தமிழ் இனத்தை அடக்கி, ஒடுக்கி, அழிக்க, ஆணவம் கொண்டிருக்கும் அரசினருக்கு ஆதரவு வழங்கும் தமிழரைப் பற்றி தங்கள் கருத்து என்ன?

ப: உடன் பிறந்தே கொல்லும் வியாதி!

ஃ

செ. செல்வராசா,
கென். யேயல் ரோட்,
விடத்தல்தீவு.

கே: கவிஞர் காசி ஆனந்தன் சிறையில் இருக்கும் போது யாரை நினைப்பார்?

ப: தமிழன்னையையும், அந்த அன்னையின் கைவிலங்கு உடைக்கப் போராடும் அனைவரையும் நினைத்து வணங்குவார்!

எஸ். ஜே. வி. ராஜகுமார்,
மாதகல்.

கே: உடுவில்பெற்ற வினோதப் பிறவி துரோகி வினோதனின் கொள்கை என்ன?

ப: தமிழ்த்துரோகி சூரியருக்கு 'ஜால்ரா' போடுவது!

கே: மாஸ்கோவுக்கு மருந்து குடிக்கச் சென்ற வ. பொ. தமிழ் உணர்ச்சிக்கு மதிப்பு கொடுக்காதது ஏன்?

ப: கம்யூனிஸ்டுகளுக்கு தமிழ் உணர்ச்சியும் உண்டென்று உமக்கு யார் சொன்னது?

ஃ

தாவடி தாசன்,
வெளிமடை.

கே: ஆறுமுக நாவலருக்குப் பின்பு சைவத்தையும், தமிழையும் காக்க வந்துதித்தவர்தான் இந்தச் 'சூரியன்' என்று கதிரவேலு பிதற்றியிருக்கின்றாரே. இது எந்த அளவில் உண்மை?

ப: கதிரவேலு இருக்க வேண்டிய இடம் அங்கொடை என்பதுதான் உண்மை!

ஃ

செல்வன் க. செல்வராசா,
இராமனுதபுரம்.

கே: மாணவர்கள் புத்தகமாகிய தமிழ் மலர் என்ற புத்தகத்தில் ஏதோ சிங்களத்தில் எழுதியுள்ளார்கள். இது யார் திருவிளையாடல்?

ப: கல்வியமைச்சின் திருவிளையாடல்!

ஃ

வே. யோசெப்தவநாயகம்,
மயிலிட்டி.

கே: பத்திரிகை சபை மசோதா பற்றி சபாநாயகர் எதிர்க்கட்சிகளுக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கியது பற்றி...?

ப: 'நல்லதீர்ப்பு!

கே: எஸ். ஜே.வியுடன் வி. பி. போட்டியிடுவாராஞல்...?

ப: வி.பி.க்கு வி. பி. அதாவது (Verdict of the People) விரோதமாக அமையும்!

ஃ

எம். கே. ஜே.
பிரேமலோசன்
திருநெல்வேலி.

கே: வெளிநாடுகளில் வாழும் நம் இளைஞர்களை அங்கு விஜயம் செய்யும் இந்நாட்டு அமைச்சர்களுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் நடவடிக்கைகளில் இறங்குமாறு கூட்டணி வேண்டுகோள் விடாமல் மௌனம் சாதிப்பதேன்?

ப: தமிழர் கூட்டணி வேண்டுகோள்விடத் தேவையில்லை. இங்கு போராட்டம் உக்கிரமாகும்போது, வெளிநாடுகளில் வாழும் தமிழ் மக்கள் தங்கள் கடமையைச் செய்வார்கள்!

ஃ

க. செல்வரத்தினம்,
கைதடி வடக்கு.

கே: தற்போது தமிழர் கூட்டணிக்கெதிராக நின்று தனிப்பட்ட முறையில் லாபம் ஈட்டும் தமிழர்கள் எப்படிப்பட்டவர்கள்?

ப: எட்டப்பனின் வாரிசுகள்!

கே: தற்கால நிலையில் தமிழருக்கும் சிங்களவர்களுக்கும் நேச மனப்பான்மை ஏற்படுமா?

ப: ஒருபோதும் ஏற்பட முடியாது-சிங்களக் குடியரசு மலர்ந்ததுபோல் தமிழ்ஈழக் குடியரசும் மலர்ந்த பின்வரே இரு நாட்டவர்களும் உறவுடன் வாழமுடியும்!

ஃ

ஜெ. தவராசா,
யாழ்ப்பாணம்.

கே: எஸ். ஜே. வி.க்கு அரசியலில் தெளிவு இருக்கிறதா?

ப: முதலில் இந்தச் சந்தேகம் வந்ததற்காக அங்கொடைக்கு சென்று உங்கள் மூளையை ஒருமுறை பரிசோதனை செய்துகொள்ளுங்கள்!

ஃ

ச. ஆனந்தன்,
கொழும்பு-12.

கே: ருஷிய சோசலிசமும் இலங்கை சோசலிசமும் ஒன்றுகுமா?

கே: ருஷிய சோசலிசம் சிறுபான்மை இனங்களுக்கு சமத்துவமும் சுயாட்சியும் அளித்திருப்பது — இலங்கை சோஷலிசம் சிறுபான்மை இனங்களை அழித்தொழிப்பது!

கே: யாழ்நகரில் நடந்த வியட்னும் ஆதரவுக்கூட்டத்தில் நீலம் சிவப்பாகிவிடும் என்று தியாகராசா பேசியிருக்கிருரே—இதைப் பற்றி சிறீலங்கா சுதந்திரக்கட்சி பாராளுமன்றக் குழுவினர் என்ன நினைப்பார்கள்?

ப: அது வெறும் 'பனி' யென்று அவர்களுக்கும்தெரியும்!

ஃ

கே. கந்தசாமி,
கொழும்பு-2.

கே: தொகுதித் தேவைகள் அல்லது இனத்தின் தேவை குறித்து, அமைச்சர்களிடம்நேரடியாகச்சென்று உதவி கேட்பதில்லையென்ற தமிழர் கூட்டணியின் முடிவை தாக்குகிறுளே 'சுந்தரி' சிவநாயகம்?

ப: துட்டை நீட்டுபவர்களுக்கெல்லாம் உடலை விற்கும் பரத்தை சுந்தரி சிவநாயகத்துக்கு சனநாயக மரபுகள் விளங்கிஞல்தானே...? ஒரு சனநாயக நாட்டில் தொகுதித் தேவை குறித்து ஒரு பிரதிநிதி எடுத்துக்கூற வேண்டிய இடம் தேசிய அரசுப் பேரவையே! அந்த இடத்தில் தமிழர் கூட்டணி பா.உக்கள் தொகுதித் தேவை குறித்தும் தமிழினத்தின் தேவைகள் குறித்தும் நிச்சயம் எடுத்துப் பேசத்தான் போகிருர்கள். அமைச்சர்களுக்கு உத்தியோக ரீதியில் கடிதமூலமாகவும் இவைகளை எடுத்துச் சொல்வார்கள். ஆஞல் தமிழர் கூட்டணி பா. உ. கள் அமைச்சரை நேரடியாக, அமைச்சரகத்தில் சந்தித்து வளைந்து, குழைந்து, நெளிந்து முதுகு சொறியக்கூடாதென்பதுதான் தமிழர் கூட்டணியின் தீர்மானம். இது பிறருக்கு, முதுகு சொறிந்தே வயிறு கழுவும் சுந்தரி சிவநாயகத்துக்கு எப்படி புரியும்?

வெட்டி ஒட்டப்பட வேண்டிய முகவரி
திருவாளர் குயுக்தியார்,
மே/பா சுதந்திரன்
194 ஏ, பண்டாரநாயக்கா வீதி,
கொழும்பு—12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உ ஸ் ஸ் ஸ் . . .

## மதுப்புட்டிகள் வந்தன

அண்மையில் வெளிநாடு சென்று திரும்பிய ஒரு 'பெருத்த' அரசியல்வாதி அங்கிருந்து கொண்டுவந்தாராம் பல பொருட்கள்—மதுப்புட்டிகள் உட்பட. வாக்காளருக்கு தானதருமம் செய்வதற்காகவே இவை இறக்குமதி செய்யப்பட்டதாகப் பேசிக்கொள்ளப்படுகிறது. மல்லாகத்தில் உள்ள ஒரு வழக்கறிஞரின் புத்திரரான வழக்கறிஞருக்கும் ஒரு போத்தல் 'பிராந்தி' கொடுக்கப்பட்டதாம். நன்றியுடன் வாங்கிய அவர் சொன்ஞராம் நீர் தான் அடுத்த எம். பி. என்று— இவருக்கென்ன தானொருவர்தான் வாக்காளர் என்ற நினைப்போ?

## ஆசையாரை விட்டது

யாழ்ப்பாணத்தில் தான்தான் பெரிய 'சுப்ப'ரெனத் திரியும் ஒருவர் தற்போது கட்டுப்பட்டுவரும் புதிய மலசல கூடங்கட்கு தனது பெயரையே வைக்கவேண்டுமென அடம்பிடிக்கிருராம். இதில் இவரது செல்லமான டெப்பியூட்டிக்கும் இவருக்கும் கருத்து வேறுபாடாம், இவர் தனது பெயர் விளையாட்டு அரங்கிற்கு இருக்கும்போது இதற்கும் இருந்தாலென்ன என விவாதிக்கிருராம். ஆசை யாரைத்தான் விட்டது?

## உண்மையைச் சொல்ல விடாதே

தொலைபேசி மூலம் அமைச்சரானவர் அண்மையில் யாழ் வந்தபோது அவருக்கும் காங்கேசன்துறைத் தொகுதி வேட்பாளராகப் போகும் இந்தப் 'பலத்'திற்கும் ஒருரையாடல் நடைபெற்றதாம்' வட, கிழக்கு மாகாணங்களில் எமது வேண்டுகோளின் பெயரிலேயே தமிழை நீதிமன்றமொழியாக்கும் சட்டம் வரப் போகிறது எனப் பிரசாரம் செய்து வருகிறேன் உன்னுடைய பீலிக்ஸ் ஒருதடவைக்கு இருதடவை செல்வநாயகத்தின் வேண்டுகோளிலேயே அதைக் கொண்டுவருவதாக கூறிவிட்டான் அதுவும் பாராளுமன்றத்தில்—எழுத்திலேயே இருக்கிறது. மக்களை ஏமாத்தவும் முடியாது. நான் எடுக்க இருக்கும் அற்பசொற்ப வாக்குகளையும் கெடுப்பான் போலிருக்கு இவனை உண்மையை பேசவேண்டாமென்று சொல்லுங்கோவன். இவன் சோசலிசத்திற்கு லாயக்கில்லாதபயலாயிருக்கு' என கையைப் பிடித்துக் கெஞ்சிஞராம். வீரவாஞன அமைச்சரும் நானிருக்கபயமேன்? எங்கள் பக்கத்தில் யாரையும் உண்மை பேச விடேன் நீ கம்யூனிசப் பக்கத்தைப் பார்த்துக்கொண்டால் சரி என்ருராம். காங்கேசன்துறை மக்களே குறித்துக்கொள்ளுங்கள்.

## பனிக்கொள்கை

ஒரு காவடி எம்பியை நண்பரொருவர் சந்தித்தபோது நீ சிலகாலத்தில் நீலமெல்லாம் சிவப்பாக மாறுமெனப் பேசிஞயாம் என்ன கட்சி மாறப்போறியோ என வினவிஞராம். அந்தக் காவடி வீரன் சொன்ஞராம் நானென்ன பிழைக்கத் தெரியாத பனியனே? இடத்திற்குத் தக்கதாகப் பேசுவேன்—ஆப்பிட்டதைப்பிடுங்குவேன். இதுகவின் கொள்கை என்ன கொள்கை என்ருராம்! எப்படியிருக்கிறது காவடியாட்டம்?

## கோழிக் கள்ளன்

அண்மையில் மந்திரியொருவர் மட்டு நகருக்கு விஜயம் செய்தபோது கூழாவடிக் கொலனியைச் சேர்ந்த ஒருவரின் வீட்டில் 14 கோழிகள் களவு போயினவாம் மட்டுநகருக்கு வருகை தந்த அந்த மந்திரிக்கு விருந்து கொடுப்பதற்காக மட்டக்களப்பு முட்டாள்ராசனின் திருடர் கூட்டம் இத்திருட்டு வேலையைச் செய்ததாகப் பேசிக்கொள்ளப்படுகின்றது.

மந்திரிக்கு கோமாளிராசனின் வீட்டில் தடல்புடலான விருந்து நடந்து கொண்டிருந்தது. கோழிகளைப் பறிகொடுத்த ஏழை வீட்டாரோ கதறி அழுத வண்ணமிருந்தனர். மந்திரி மட்டுநகருக்கு வருவதாக இருந்தால் அதற்கு முதல் நாள் இரவு நேரங்களில் கூழாவடிக் கொலனியில் மக்கள் தங்கள் கோழிகளைக் காப்பாற்றும் பொருட்டு மிகவும் விழிப்பாக இருக்கவேண்டும் என்ற நிலை ஏற்பட்டுள்ளதாம்.

---

# சேராத தந்தி!

கடந்த ஆண்டு (1972) செப்டம்பர் மாதம் 18ந் திகதி, இலங்கைத் தொழிலாளர் கழக இராகலை மாவட்டப் பிரதிநிதி திரு. வ. ஆறுமுகநாதன் அவர்களால் கல்கிறனேயா அஞ்சல் நிலையத்திலிருந்து, ஒட்டன் குருப் பங்களா டிவிகனைச் சேர்ந்த ஒரு தொழிலாளிக்கு அவசர விடயம் ஒன்று தந்தி வாயிலாக அனுப்பப்பட்டது. சம்பந்தப்பட்ட தொழிலாளி மேற் கண்ட தந்தி கிடைக்காமல் தந்தி அனுப்பிய மாவட்டப் பிரதிநிதியை நேரில் வந்து சந்தித்த பிறகுதான் தந்தி உண்மையில் அன்னருக்கு கிடைக்கவில்லையென அறிய வந்தது.

இச் செய்தியைக் கேட்ட மாவட்டப் பிரதிநிதி திரு. ஆறுமுகநாதன் அவர்கள் ஒட்டன் உப அஞ்சல் அதிபருடன் தொடர்பு கொண்டபோது கல்கிறனேயாவிலிருந்து சம்பந்தப்பட்ட தந்தி [illegible] ஒரு மாதத்திற்குப் பின்னர் பதில் எழுதியிருந்தார். இதனை ஆதாரமாகக் கொண்டு கொழும்பு தபால் மா அதிகாரியுடன் தொடர்பு கொண்டும், இதுவரையில் சம்பந்தப்பட்ட தந்தி இந்தத் தீவின் எந்தப் பகுதிக்கு அனுப்பப்பட்டிருக்கின்றது என்பது ஆராயப்படவில்லை.

இந்த விவகாரத்தை முன்விட்டு தபால் தந்தி இலாகா கடந்த நான்கு மாத காலமாக உரிய நடவடிக்கையை இன்னும் மேற்கொள்ளாதிருப்பதை தபால் தந்தி தொடர்புகள் அமைச்சர் செல்லையா குமாரசூரியர் அவர்களின் மேலான கவனத்துக்கு திருப்பப்பட்டுள்ளது.

இது சம்பந்தமான மேல் நடவடிக்கைகளை கழகத் தலைவரும் மூதூர் பாராளுமன்ற உறுப்பினருமான திரு. அ. தங்கத்துரை, அவர்களும், துணைத்தலைவர் திரு. வ. ந. நவரட்ணம் அவர்களும் மேற்கொண்டிருக்கின்றார்கள்.

# மாஸ்கோ மனிதர்களும் மானத் தமிழினமும்!

அன்பு நண்பா,

உண்மையாகத் தூங்குபவனை எழுப்பலாம்—ஆனால் தூங்குவது போல பாசாங்கு செய்பவனை எழுப்ப முடியாது என்று கூறுவார்கள். தமிழினத்தின் இன்றைய ஆபத்தான நிலை—புதிய அரசியல் சட்டத்தின் பின்னல் தமிழினத்துக்கு வந்திருக்கிற பயங்கரப் பேரழிவு—இவற்றைப் பற்றியெல்லாம் உணராதவர்கள், உணரும் ஆற்றலற்றவர்கள், நிலைமையை எடுத்து விளக்கும்போது எழுச்சி பெறுகின்றனர்; தெளிவு பெறுகின்றனர்; வந்திருக்கும் ஆபத்திலிருந்து தமிழினத்தை மீட்டிடும் பணியில் தங்களை ஈடுபடுத்திக்கொள்ளத் துடித்தெழுகின்றனர். இப்படிப்பட்டவர்கள் உண்மையாகவே தூங்கிக்கிடந்தவர்கள் — இவர்களை தட்டியெழுப்ப முடிகிறது!

ஆனால் இந்நாட்டில் தமிழினத்துக்கு வந்திருக்கின்ற பேராபத்தை—அதிலிருந்து மீட்சி பெற தமிழினம் சுதந்திரம் பெற்றாக வேண்டுமென்ற உண்மையை — உள்ளூரத் தெரிந்துகொண்டும், ''தமிழினத்துக்கு ஆபத்து எதுமில்லை; அரசியல் சட்டம் எல்லா உரிமைகளையும் வழங்கிவிட்டது—தமிழர் கூட்டணியினர்தாம் இனவெறியைக் கிளப்புகின்றனர்'' என்று கூறிக்கொண்டு, சிங்கள ஏகாதிபத்தியத்துக்கு தெண்டனிட்டுக் கால் கழுவி, நிலபாவாடை விரித்து, அது வீசும் எலும்புத் துண்டைக் கடித்துச் சுவைத்து—இழிவு வாழ்வு வாழுகிறார்களே தமிழ் ஈழத்தில் ஒரு சிலர்—அவர்கள் தூங்குவதுபோல பாசாங்கு செய்கிறவர்கள் — அவர்களைத் தட்டியெழுப்ப யாராலும் முடியாது!

பிரச்சினையை, நிலைமையை தெரியாதவர்களல்ல இவர்கள்—ஈழத்தில், தமிழினம் அடிமைப்படுத்தப்பட்டு, அழித்தொழிக்கப்படுகிறது என்கின்ற உண்மை புரியாதவர்கள் அல்ல இவர்கள் — ஆனால் தெரிந்தும் மூடி மறைக்கிறார்கள் — புரிந்தும் புரியாததுபோல நடித்துக்கொண்டு சிங்கள ஆதிக்கத்துக்கு சாமரை வீசிடும் சின்னமனிதர்களாக நடமாடுகிறவர்கள்—நெஞ்சாரப் பொய் சொல்லுகின்றவர்கள் இவர்கள்!

அருளம்பலம், தியாகராசா, மார்டின், பி. ஆர். செல்வநாயகம், விசுவநாதன், வீ. பொன்னம்பலம், விநோதன், கதிரவேலு, அல்பிறட் துரையப்பா போன்ற சிங்கள ஏகாதிபத்தியத்தின் கங்காணிகளே, இன்று தூங்குவதுபோல பாசாங்கு செய்துகொண்டு, தமிழினத்துக்கு பொறிக்கிடங்கு தோண்டும் கைங்கரியத்தில் ஈடுபட்டிருக்கின்றனர்!

ஆம் நண்பா, தமிழினத்தின் மத்தியிலே தான் இத்தகையதொரு இழிநிலை—வருத்தத்துக்குரியநிலை காணப்படுகிறது. ஆந்திரப் பிரதேசத்தைப்பார்! அங்கு, ஆந்திர பிரதேசத்தை 'ஆந்திர அரசு — தெலுங்கானா அரசு' என்று இரண்டாக பிரித்திட வேண்டுமென்ற கிளர்ச்சி எவ்வளவு வைராக்கியத்துடனும், வேகத்துடனும் நடைபெற்று வருகிறது! ஆந்திர மாநிலத்தை இரண்டாகப் பிரித்திட வேண்டுமென்ற கோரிக்கை நியாயம் என்ற கருத்தை நான் ஆதரித்திடவில்லை. ஆயினும் ஆந்திரர்களின் போராட்டத்தில் — அவர்களது ஒற்றுமையில் இருக்கின்ற உணர்ச்சிப் பிரதிபலிப்பே என்னை மெய்சிலிர்க்க வைக்கிறது!

'ஆந்திர அரசு' தனியே உருவாக வேண்டும் என்கின்ற கோரிக்கையில்—இந்திரா காங்கிரசு, சிண்டிக்கேட் காங்கிரசு, கம்யூனிஸ்ட், சுதந்திரா, சோசலிஸ்ட் என்கின்ற கட்சி வேறுபாடுகள் ஏதுமின்றி—ஆந்திரர்கள் ஒன்றுபட்டு ஒரேகுரல் கொடுக்கிறார்கள் அங்கு! நீதிபதிகளை வழக்கறிஞர்களே ''கேரோ'' செய்கின்றனர்! ஆந்திரர்களின் இந்த ஒற்றுமை உணர்வைத்தான் நான்பெரிதும் மதிக்கிறேன்.

ஆனால் இங்கு—தமிழினத்தின் உரிமைகள் யாவும் பறிக்கப்பட்டு அழிவின் விளிம்புக்கு தள்ளப்படுகின்ற இன்றைய நிலையிலே கூட—தமிழர்கள் மத்தியில் ஒரே குரல்—விடுதலைக் குரல் இன்னும் ஓங்கி ஒலிக்கத் தொடங்கவில்லை. தமிழர்கள் மத்தியில் சிங்கள ஆட்சிக்கு பந்தம் பிடிப்போரும் பாதம் தாங்குவோரும்—தமிழர் விடுதலை உணர்ச்சிக்கு ஊறுதேடுவோரும், மாறுபாடுள்ளோரும் இன்னும் இருக்கத்தான் செய்கிறார்கள்! தமிழினத்தின் உரிமைக்கோரிக்கையை எதிர்ப்பதற்கு தமிழர்களிடையே கோடரிக்காம்புகள் இருந்துகொண்டிருக்கிறார்கள்! தமிழர்களிடையே தமிழினத்தின் மொழி, இன, மத ஆட்சி உரிமைகளை ஒப்புக் கொள்ள மறுக்கும் சிங்கள சிறீலங்கா சுதந்திரக்கட்சிக் கிளைகளும் சிங்களக்கம்யூனிஸ்ட் கட்சியும், சிங்கள சமசமாஜக் கட்சியும் சிங்கள யூ. என். பியும்—இன்னும் இருந்துகொண்டிருப்பதுமட்டுமல்ல—தமிழர்களின் விடுதலைப்போராட்டத்திற்கு—உரிமைக் கோரிக்கைக்கு சவால் விட்டுக்கொண்டிருக்கும் இந்தக் கட்சிகளில் சில தமிழர்களே அங்கம் வகித்து ஐந்தாம் படைகளாக தமிழ் ஈழத்தில் உலாவருகிறார்கள் என்றால்—தமிழர்களின் உள்ளங்களில் தீவிர விடுதலை உணர்வு இன்னும் பற்றிப்பிடிக்கவில்லை என்பது தானே அர்த்தம்!!

ஆம் நண்பா, புதிய அரசியல் சட்டத்தின் கீழ் தமிழினத்தின் உரிமைகள் பறிக்கப்பட்டு தமிழினம் கொத்தடிமையாக்கப்பட்டுள்ளதை தமிழர்கள் எதிர்க்கிறார்கள் என்பதை எடுத்துக்காட்டும் நோக்குடன் சிங்கள ஆட்சியாளருக்கு சவால்விடுத்து தமது தேசிய பேரவை உறுப்பினர் பதவியைத் துறந்துள்ளார் தமிழ் ஈழ முதல்வர் பெரியவர் செல்வா அவர்கள்!

35 இலட்சம் ஈழத் தமிழ் தேசிய இனத்தின் அபிலாஷையை—கருத்தை பிரதிபலிக்கின்ற தந்தை செல்வா காங்கேசன்துறை இடைத்தேர்தலில் போட்டியிடுகிறார் என்றால் சிங்கள ஏகாதிபத்தியத்தை எதிர்த்து, தமிழ்த் தேசிய இனம் போட்டியிடுவதாகவே அர்த்தம்! தந்தை செல்வாவை எதிர்த்து—அதாவது தமிழினத்தை—தமிழினத்தின் விடுதலைக் கோரிக்கையை எதிர்த்தும்-தமிழினத்தை சிறுமைப்படுத்தி அழித்தொழிக்கும் புதிய அரசியல் சட்டத்தை ஆதரித்தும் சிங்கள ஏகாதிபத்தியத்தின் பிரதிநிதியாக ஒரு தமிழர் போட்டியிடப்போகிறாராம்—அவர் தோழர் வ. பொன்னம்பலம் என்பதே இன்றைய நிலை!

தோழர் வ. பொன்னம்பலம் படித்தவர்—அரசியல் நிலைமைபுரியக்கூடியவர், ஆனாலும் நான் முதலில் கூறினேனே—தூங்குவதுபோல பாசாங்கு செய்யும் மனிதர்கள் சிலர் இருக்கிறார்கள் என்று! இவரும் அந்த வரிசையைச் சேர்ந்தவர்! கிணறு என்று தெரிந்தும் கண்ணை மூடிக்கொண்டு தமிழ் மக்கள் கிணற்றுள் வழ வேண்டுமென்று கூறுபவர் இவர்!

தோழர் பொன்னம்பலம், காங்கேசன் துறை அபிவிருத்தி சபையின் ஆண்டு விழாவில் அண்மையில் பேசியிருந்த பேச்சொன்றைப் படித்தபோது, எம். ஏ. பட்டதாரியான பொன்னம்பலத்துக்கு இவ்வளவு தூரம் நாம் சுட்டிக்காட்டுகின்ற பிரச்சினை—அரசியல் சட்டம் பற்றிய பிரச்சினை—புரியவில்லையே என்று ஒரு கணம் நினைத்தேனாயினும், மறுகணம் இவர் புரியாமல் பேசவில்லை—மக்களை குழப்புவதற்கு 'தூங்குவதுபோல பாசாங்கு' செய்கிறார் என்று எண்ணிக்கொண்டேன்!

## அரசியல் மேடை

'புதிய அரசியல் சட்டத்தின்கீழ் — தமிழினம் அனுபவித்து வந்த உரிமைகள் எதையும் இழந்துவிடவில்லை— இழந்துவிட்டோம் என்று தமிழரசுக் கட்சியினா கூறுவது வெறும் கற்பனை' என்று திரு. பொன்னம்பலம் அடித்து முழக்கியிருக்கிறார்; கைப்புண்ணுக்கு கண்ணாடி தேடியிருக்கிறார்!

தமிழரசுக்கட்சி, ஒவ்வொரு காலகட்டத்தில், சிங்களக் கட்சிகளுடன் ஏதாவது ஒரு குறிப்பிட்ட நோக்கத்துடன் இடைக்கால பொருத்தங்களை—உடன்படிக்கைகளை செய்திருக்கலாம்! ஆனால் ஓர் அரசியல் திட்டத்தை உருவாக்கும் நோக்குடன், எந்த ஒரு சிங்களக் கட்சியுடனும் எந்த ஒரு உடன்பாட்டுக்கும் எந்த ஒரு காலகட்டத்திலும் தமிழரசுக் கட்சி வந்ததில்லையென்பதை முதலில் 'வாலுப் போனு' அறிந்துகொள்ளவேண்டும்!

1957ம் ஆண்டு, பண்டாரநாயகாவுடன் தமிழரசுக் கட்சி ஒப்பந்தம் செய்துகொண்டது—ஆகஸ்ட் போராட்டத்தை கைவிடும் ஒரே நோக்குடன்! 1965ம் ஆண்டு யூ. என். பி. யுடன் ஓர் உடன்படிக்கை ஏற்பட்டது. இவை எல்லாம் தற்காலிகமானவையே தவிர—தமிழினத்தின் இறுதி இலட்சியங்களை உள்ளடக்கியதல்ல—உள்ளடக்கியதாக தமிழரசுக் கட்சி என்றுமே கூறியதும் கிடையாது!

எனவே அரசியல் சட்டத்தில் தமிழினத்தின் உரிமைகள் பற்றி ஆராயும் போது— ஒவ்வொரு காலகட்டத்திலும் உருவான இடைக்கால உடன்படிக்கைகளை முன்வைத்து ஆராய்வது அரசியல் தர்மம் ஆகாது —தமிழினத்தின் இறுதி இலட்சியத்தை—தமிழினத்தின் பூரண உரிமைகளை முன்வைத்தே ஆராயப் படவேண்டும்!

புதிய அரசியல் சட்டத்தின்கீழ், தமிழினம் இந்நாட்டில் உரிமைகளை இழந்துள்ளதா இல்லையா என்று ஆராய வேண்டுமானால் இதற்கு முந்திய சோல்பரி அரசியல் திட்டத்தையும், இந்நாட்டு வரலாற்றையும் அதனுடன் ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும்!

சோல்பரி அரசியல் சட்டம் ஆங்கில ஏகாதிபத்தியத்தின் கடைசிச் சின்னமாக இருந்ததாக கூறப்படுகிறது. ஆங்கிலேய ஏகாதிபத்தியம்தான் இரண்டு தனித் தனி அரசுகளாக இருந்த ஈழத் தமிழ் அரசையும் சிங்கள அரசையும் இணைத்து 'சிலோனை' உருவாக்கியது! எனவே ஆங்கில ஏகாதிபத்தியத்தின் கடைசித் தனியான சோல்பரி அரசியல் திட்டம் அகற்றப்படும்போது—சிங்களவர்களினதும், தமிழர்களினதும் — இரு இனத்தவர்களதும் அரசுரிமைகள் மீட்கப்பட்டிருக்க வேண்டும்!

ஆனால் நடந்தது என்ன? சோல்பரி அரசியல் திட்டம், புதிய அரசியல் திட்டத்தால் மாற்றியமைக்கப்பட்டபோது, சிங்களவர்களின் இறைமையும் அரசுரிமையும் மட்டுமே காக்கப்பட்டது! தமிழர்களின் இறைமையும், அரசுரிமையும் சிங்களவர்களால் கபளீகரம் செய்யப்பட்டிருக்கிறது. புதிய அரசியல் திட்டம், தமிழர்களின் அரசுரிமையை இறைமையை சுதந்திரத்தைப் பறிந்துவிட்டது! இது இழந்த உரிமை ஆகாதா?

சோல்பரி அரசியல் திட்டத்தில் சிறுபான்மை இனங்களின் அடிப்படை உரிமைகளைப் பறித்திட முடியாதபடி ஓரளவு பாதுகாப்பு – 29வது சரத்து மூலம் தரப்பட்டிருந்தது புதிய அரசியல் திட்டத்தில் அந்தப் பாதுகாப்பு முற்றாக அகற்றப்பட்டுவிட்டது. இது இழந்த உரிமை ஆகாதா?

சோல்பரி அரசியல் திட்டத்தில் சிங்களம் மட்டும்தான் அரசகரும மொழி என்று வரையறுக்கப்பட்டிருக்கவில்லை. புதிய அரசியல் சட்டத்தில் சாதாரண சட்டமாக இருந்த சிங்களம் மட்டும் சட்டம், மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையின்றித் திருத்த முடியாதபடி நிலையான இடத்தைப் பெற்றுவிட்டது. சிங்களம் மட்டும் சட்டம் தமிழினத்தின் உரிமைகளை அபகரிக்கவில்லையா? தமிழினத்தை இரண்டாந்தர நிலைக்கு தாழ்த்தவில்லையா? தமிழ் மொழியின் ஆட்சியுரிமையை பறிக்கவில்லையா?

சோல்பரி அரசியல் திட்டத்தில், பௌத்தம் அரசாங்க மதம் என்று எவ்விடத்திலும் குறிப்பிடப்படவில்லை புதிய அரசியல் சட்டத்திலோ பௌத்தத்துக்கு முதலிடம் தரப்பட்டு பௌத்த மதத்தைப் பேணிவளர்த்தலும், பாதுகாத்தலும் அரசின் கடமையாக்கப்பட்டு, அரசாங்கமதம் எனும் நிலைக்கு உயர்த்தப்பட்டிருக்கிறது. ஏனைய மதங்களுக்கு இந்த உரிமை தரப்படவில்லை. இது ஏனைய மதங்களின் உரிமைகளைத் தட்டிப்பறிப்பதாகாதா? பாரபட்சமாகாதா?

புதிய அரசியல் சட்டம், தமிழினம் இதுகாறும் அனுபவித்து வந்த உரிமைகளை—அற்ப சொற்ப பாதுகாப்புகளைக் கூட பறித்துவிட்டது!!—தமிழினத்தின் அரசுரிமை, இறைமை, மொழியுரிமை மத உரிமை, குடியுரிமை அனைத்தையுமே கொன்றொழித்து விட்டது!

புதிய அரசியல் சட்டத்தில், 1966ம் ஆண்டு சனவரி 8ம் நாள் நிறைவேற்றப்பட்ட தமிழ்மொழிப் பிரமாணங்களும் இடம் பெற்றிருப்பதாக கூறியிருக்கிறார் தோழர் பொன்னம்பலம். இப்படிக்கூறி அவர் யாரை ஏமாற்ற முயலுகிறார்? அரசியல் தெளிவுள்ள தமிழ் மக்களை ஏமாற்ற முடியுமா அவரால்?

1966ம் ஆண்டின் தமிழ் மொழிப் பிரமாணங்கள் அரசியலமைப்பின் ஒரு பகுதியாக கருதப்படமாட்டாது; ஒரு சாதாரண சட்டமாகவே அது இருக்கும் என்றே அரசியல் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது அதாவது—அந்தத் தமிழ்மொழிப் பிரமாணங்களுக்கு கூட அரசியல் சட்ட அந்தஸ்து இல்லை என்பதை திட்டவட்டமாக எடுத்துக் காட்டுவதற்காகவே அரசியல் சட்டத்தில் அப்பகுதி சேர்க்கப்பட்டுள்ளது.

சாதாரண சட்டமாக இருக்கும் 1966ம் ஆண்டின் தமிழ் மொழிப் பிரமாணங்களைக் கூட, ஐக்கிய முன்னணி அரசு நடைமுறைப்படுத்த மாட்டாது என்று, அமைச்சர் பீலிக்சும், அரசியலமைப்பு அமைச்சர் கொல்வின் ஆர் டி. சில்வாவும் தேசிய பேரவையில் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகளில் திட்டவட்டமாக—தெளிவாக எடுத்துக் கூறிவிட்டார்கள்.

எனவே தோழர் பொன்னம்பலம், நெஞ்சாரப் பொய் சொல்லுவதை தயவு செய்து நிறுத்திவிட வேண்டும். தமிழினத்தின் விடுதலைப் போராட்டத்தை எதிர்ப்பதற்கு அவருக்கு தெம்பிருந்தால் — திராணியிருந்தால் எதிர்த்து—இனத்துரோகியென்ற வரலாற்றுக் கறையை தமக்கும் தம் சந்ததிக்கும் சேர்த்துக் கொள்ளட்டும்!

உன் அன்புத்தோழன்

கோவை-மகேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணம்

# உயிர்ப் பிரச்சினை!

ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து, மனிதனைக் கடிக்க ஆரம்பித்ததுபோல—சிங்கள ஆட்சியாளர்கள் தமிழ் தேசிய இனத்தின் உரிமைகளை ஒவ்வொன்ருகப் பறித்து வந்து, இன்று தமிழினம் தனித்துவத்துடன் வாழுவதற்கு வேண்டிய அத்தியாவசிய அடிப்படை உரிமையொன்றிலும் கைவைத்து விட்டார்கள். அதுதான் போதனுமொழியுரிமையாகும்!

ஒரு பிள்ளை அதன் தாய் மொழியிலேயே கல்வி கற்க வேண்டுமென்பது ஐ. நா. சபையின் அடிப்படை உரிமை சாசனம் வலியுறுத்தி நிற்கும் மறுக்கொணு உரிமையாகும்—உலக கல்வி நிபுணர்கள் அனைவரும் ஒப்புக் கொண்டுள்ள உண்மையாகும்.

ஈழத் தமிழ்த்தேசிய இனத்தினர், தங்கள் தாய்மொழி மூலம் தங்கள் பிள்ளைகளுக்கு கல்வியூட்டுவது அவர்களது பிறப்புரிமை; யாராலும் மறுக்கமுடியாத அடிப்படை உரிமை. இந்த உரிமைக்கு கூட சிங்கள அரசு இன்று வேட்டு வைத்து தகர்த்தெறிய முடிவு செய்து விட்டது. அந்த முடிவின் எதிரொலியே தனித்தமிழ் கிராமமான புத்தூரிலுள்ள ஒரு பாடசாலையில் தமிழ்மொழி மூலம் பயின்று வந்த சைவத் தமிழ் பிள்ளைகளுக்கு, திடீரென சிங்களத்தை போதனுமொழியாக்கி, பௌத்தத்தை கட்டாய பாடமாக்கிய 'இனக்கொலை' நடவடிக்கையாகும்.

ஈழத்தமிழினத்தை வேரோடு கருவறுக்கும் சதி நடவடிக்கைகளில் 1948ம் ஆண்டு வெள்ளையன் அகன்ற நாள் தொட்டு, மாறி மாறி வந்த சிங்கள அரசுகள் ஈடுபட்டு வந்திருக்கின்றன. தமிழ்த் தேசிய இனத்தின் தனித்துவத்தை—கலாசாரத்தை, மொழியை, மதத்தை, அழித்தொழித்து, இந்நாட்டைத் தனியொரு பௌத்த சிங்கள நாடாக மாறுவதே சிங்கள அரசுகளின் உள்ளாந்தர திட்டம் என்பதை நாம் எப்போதும் சுட்டிக் காட்டி வந்திருக்கிறோம்.

இந்த நோக்கத்தை ஈடேற்றும் எண்ணத்துடன் தான் பூரண குடியுரிமை பெற்றிருந்த 10 இலட்சம் மலையகத் தமிழர்களின் குடியுரிமை, வாக்குரிமைகளை, கொடூரமான பிரஜாவுரிமைச் சட்டங்களைக் கொண்டுவந்து பறித்தனர்—இதன் மூலம் தமிழர்களின் அரசியல் பலத்தைச் சரிபாதியாக வெட்டிக் குறைத்தனர்.

தமிழர்களின் பாரம்பரிய பிரதேசமான—பூர்வீகச் சொத்தான—வடக்கு, கிழக்கு மாகாணங்களில், தமிழர்களின் பலத்தைக் குறைக்கும் நோக்குடன் பல்லாயிரக் கணக்கான சிங்களவர்களைத் திட்டமிட்டுக்குடியேற்றி, தமிழர் பூமியை ஆக்கிரமித்தனர்—இன்றும் ஆக்கிரமிக்க முயன்று வருகின்றனர்!

சிங்களம் மட்டும் சட்டத்தைக் கொண்டு வந்து, தமிழ் மொழியின் உரிமைகளைப் பறித்துத் தமிழர்களை இரண்டாந்தர நிலைக்குத் தள்ளினர். இச்சட்டத்தின் மூலம் தமிழர்களின் உத்தியோகங்களை, தொழில்களைத் தட்டிப் பறித்தனர்;

தமிழர்களில் ஓர் பகுதியினரைப் பௌத்த மதத்துக்கு மதமாற்றம் செய்யும் முயற்சியிலும் ஈடுபட்டனர்—ஈடுபட்டு வருகின்றனர்!

பல்கலைக்கழகக் கல்வி, தமிழ் மாணவர்களுக்குக் கிடைக்காமற் செய்ய வேண்டும் என்ற ஒரே நோக்குடன் தரப்படுத்தல் எனும் இனப்படுத்தல் திட்டத்தை கொண்டு வந்தனர்—இதனால் திறமையும் தகுதியும் உள்ள தமிழ் மாணவர்களின் உயர் கல்விக்குக் கொள்ளி வைத்தனர்!

இதற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல், இந்நாட்டில், தமிழினத்தவரை நிரந்தர அடிமைகளாக்கி, அழித்தொழிக்கின்ற—சிங்கள இனத்துக்கே சர்வவல்லமையும், ஆளுகை உரிமையும் தருகின்ற—புதிய அரசியல் சட்டத்தைக் கடந்த ஆண்டு கொண்டு வந்து நிறைவேற்றியிருக்கின்றனர்! தமிழ் மக்களை ஆளப்படும் இனமாக்கியுள்ளனர்!

புதிய அரசியல் சட்டம்வந்து ஓராண்டு கூடமுடியவில்லை—அதற்குள் தமிழ் மாணவர்கள் தமிழ்மூலம் படித்து வந்த புத்தூர் பஞ்சாயத்து பாடசாலையில் சிங்களத்தைப் போதனு மொழியாக்கி, தமிழ் குழந்தைகளின் தொண்டைக்குள் பலவந்தமாகத் திணிக்கவும் பௌத்த மதத்தை கட்டாய பாடமாகத் திணிக்கவும் — உத்தரவிட்டுள்ளனர் ஆட்சியாளர்கள்!

புத்தூரில்—அதுவும் தனித்தமிழ்க்கிராமமொன்றில்— இன்று நடைபெறுகின்ற இந்த அநியாயம், அக்கிரமம், இனக்கொலை முயற்சி — வருங்காலத்தில் இந்நாட்டில் என்ன நடைபெறப் போகின்றது என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டாகும். தமிழினத்தை முன் எச்சரிக்கைப்படுத்தும் ஒரு சம்பவமாகும்!

சிங்களத்தில் படிக்கமுடியாது என அப்பாடசாலையை விட்டு வெளியேறிய தமிழ் மாணவர்களுக்கு அக்கம்பக்கத்திலுள்ள வேறு பாடசாலைகளில் இடம் தர கல்விப்பகுதி மறுப்பது — கடைந்தெடுத்த அயோக்கியத்தனமாகும். படித்தால், சிங்களத்தை போதனு மொழியாக ஏற்று பௌத்தத்தை படி — இன்றேல் உனக்குப் படிப்பேயில்லை —என்று இந்நாட்டுத் தமிழ் மக்களைப் பார்த்து சிங்கள ஆட்சியாளர்கள் சவால்விடுகின்றுர்கள் என்பதே இதற்குப் பொருளாகும்.

இந்த நிலை ஒருநாளைக்குவரும்—தமிழ் பிள்ளைகள் தமிழ் மூலம் படிக்கும் உரிமையை ஆட்சியாளர்கள் மறுப்பார்கள்—சிங்களத்தைத் திணிப்பார்கள் போதனு மொழியாக —என்று அஞ்சித்தான், அரசியல் திட்டத்திலே தமிழ் பிள்ளைகளின் போதனுமொழி தாய்மொழியாகவேயிருக்க வேண்டும் என்று குறிப்பிடப்படவேண்டும் என்று தமிழரசுக் கட்சிப் பிரதிநிதிகள் அரசியல் நிர்ணய சபையில் திருத்தம் கொண்டு வந்தார்கள். ஆனால் அப்போது அத்திருத்தத்தை ஆட்சியாளர்கள் ஏற்க மறுத்துவிட்டனர். ஏன் சிறீலங்கா சுதந்திரக்கட்சி, ஐக்கிய தேசியக்கட்சி, சமசமாசக்கட்சி, கம்யூனிஸ்ட்கட்சி ஆகிய அனைத்துக் கட்சிகளுமே ஏற்கமறுத்து விட்டன. அருளாபலம், தியாகராசா போன்ற தமிழ்த்துரோகிகள்கூட அரசுடன் சேர்ந்து அதை எதிர்த்தார்கள்.

இந்நாட்டுத் தமிழினத்தின்மீது மெல்லமெல்ல, சிங்களத்தையும் பௌத்தத்தையும் திணித்து — தமிழர்களின் தனித்துவத்தை அழித்து இந்நாட்டை ஒரு பௌத்த சிங்கள நாடாக்குவதே அனைத்துச் சிங்களக் கட்சிகளினதும் நோக்கமாக இருக்கும்போது, போதனுமொழி பற்றிய உரிமை அரசியல் சட்டத்தில் இடம்பெறவேண்டும் என்ற கோரிக்கையை அவர்கள் ஏற்க மறுத்ததில் வியப்பில்லை!

எனவே சிங்கள ஆட்சியின் சதிகாரத்திட்டத்தை—பயங்கர இனக்கொலைத் திட்டத்தைப் புரிந்துகொண்டு, அதை முறியடிப்பதற்கு தமிழினம் உடனடியாகத் தயாராக வேண்டும்!

போதனுமொழி உரிமை தமிழினத்தின் உயிருக்குயிரான உரிமை. ஒரு தமிழ் பிள்ளை தமிழிலே படிக்கவும், தன்னுடைய கலாசாரத்தையும், மதத்தையும் பின்பற்றவும் உரிமையுள்ளதாக இருக்கவேண்டும். இந்த உரிமை நிலை நாட்டப்பட்டால்தான் தமிழினம் தமிழினமாக இந்நாட்டில் வாழ முடியும்—தனித்துவத்தைக் காக்க முடியும்! இந்த உரிமையைக் கட்டிக்காக்க—சிங்கள பௌத்த பலாத்காரத் திணிப்பை எதிர்த்திட—தமிழினம் ஓரணியாய் ஒன்று திரண்டு போர்க்களம் காண வேண்டிய காலம் வந்து விட்டது!

இவ்வளவு பேராபத்து சூழ்ந்த பின்னும் நாம் தூங்கினால் தமிழினமே இந்நாட்டில் அழிந்துவிடும் — நம் வருங்கால சந்ததிகள் நம்மை மன்னிக்காது!

தமிழர் கூட்டணி தன்னுடைய ஆளுமையைப் பயன்படுத்தி இப்பிரச்சினையில் முழுமூச்சாக ஈடுபட வேண்டும். ஏனெனில் இது நம் இனத்தின் உயிர்ப் பிரச்சினை! இதிலும் தமிழர்கள் தூங்குவார்களானால், தமிழினத்தின் அழிவை கடவுளாலும் காப்பாற்ற முடியாது போய் விடும்!

# சட்டக்கல்லூரித் தமிழ்மன்றத் தேர்தலில்....!

# 'என்ன விநோதம் பாரு'!

'என்ன விநோதம் பாரு! டேய்! மதுரம் பாரு' என கலைவாணர் என். எஸ். கே. 'பைத்தியக்காரன்' திரைப் படத்தில் (என்று நினைக்கிறேன்) பாடிய ஒரு பாட்டு உண்டு. சட்டக்கல்லூரித் தமிழ் மன்றத் தேர்தலில், விநோதன் என்ற பேர்வழி வெற்றிபெற்ற (!) விநோதத்தையும் அதற்குத் 'திக்கு வாய்த் தினசரிகள்' சில கொடுத்த விளம்பரத்தையுங் கண்டபோது இந்தப் பாடல் தான் நினைவுக்கு வந்தது.

உடுவில் தொகுதியிலே கடந்த தேர்தலில் போட்டியிட்டுக் கட்டுக்காசும் இழந்த இந்தக் கற்றுக்குட்டி உடுவில் தொகுதியில் ஆளுங்கட்சிக்கு எடுபிடியாகப் பணியாற்றும் இந்தக் குட்டிக்கொப்பரேட் வெற்றிபெற்ற விசித்திரம் வெளிக்குத் தெரியாது.

விநோதனின் லீலா விநோதம் தனியானது. விநோதனுக்குக் கிடைத்த வெற்றி தற்காலிகமானது. அதனால் கிடைக்கும் மனதிருப்தியும் குட்டரோகி ஒருவன் தன் சிரங்கைச் சொறிவதால் பெறக்கூடிய இன்பமே என்பது இந்த விசித்திரனுக்கும் நன்ருகத் தெரியும்.

சட்டக்கல்லூரித் தமிழ் மன்றத்தின் பாரம்பரியம் மிகவும் புனிதமானது. தமிழ் முரசுத் தளபதி திரு. அமிர்தலிங்கத்தினதும், உடுவிற் தொகுதியின் இன்றைய உறுப்பினர் திரு. தர்மலிங்கம் அவர்களினதும் உழைப்பினிலே அவர்களையே முதன் முதலாகத் தலைவராகவும் செயலாளராகவும் கொண்டு கருவாகி உருவாகியது தமிழ் மன்றம். தமிழ்ப் பணிக்கென அவர்களால் உருவாக்கப்பட்ட மன்றத்தில் தமிழ்ப் பிணி நுழைந்தது எவ்வாறு?

(1) தமிழரின் இன்றைய இலட்சிய வேட்கையின் மத்தியிலே, தமிழரின் ஆதரவோடு தமிழ் மன்றத் தலைவராகிவிட முடியாதெனக் கண்ட விநோதன் தமிழ் மன்ற யாப்பில இடைக்காலத்தில் ஏற்பட்ட ஓட்டை உடைசல்களை தமக்குச் சாதகமாகப் பயன படுத்தி 55 சிங்கள மாணவர்களை தமிழ்மன்ற உறுப்பினராகப் பதிவு செய்வித்தார் உறுப்பினர் சட்டணமாக ரூ: 110 ஐயும் கொடுக்க யார் மடியவிழ்த்தார் என்பது சொல்லியா தெரிய வேண்டும்?

(2) விநோதனை எதிர்த்துப் போட்டியிட்ட தமிழர் கூட்டணி ஆதரவாளரான கனகமனோகரன் தமிழ் மாணவ மாணவிகளிடம் வாக்குக் கேட்ட முறை அர்த்த புஷ்டியானது 'உங்களுக்குத் தமிழ் மன்றத்தையும், அதன் தேவையையும் தெரியும்; என்னையும் எதிர்த்துக் கேட்பவரையுந் தெரியும். ஆடு, மாடுகள் போல் இரண்டு ரூபாக்களுக்கு விலைக்கு வாங்கப்பட்டு எதற்குச் சேருகிறோம் என்று தெரியாமல், எதனையாவது நிறையிற் சேற வேண்டும் என்று கேட்டுக் கீறுபவர்களால் தமிழ் மன்றத்துக்குத் தகுந்த தலைவரைத் தேர்ந்துவிட முடியாது. அவர்களிடம் நான் வாக்குக் கேட்கமாட்டேன். தமிழ் மாணவ, மாணவிகளான உங்களை மட்டுமே கேட்பேன்' என்று வேண்டுகோள் விடுத்தார். தனியொரு சிங்கள உறுப்பினரைத் தானும் இவர் வாக்குக்கேட்டது கிடையாது. தமிழ் மன்றத்தின் தலைவிதியைச் சிங்கள உறுப்பினர் நிர்ணயிக்கலாம் என்ற அடிப்படையையே இவர் நிராகரித்திருந்தார்.

(3) சட்டக் கல்லூரித் தமிழ் மன்றத்தின் 'சனநாயகவாளர்களுக்கு' இவ்வுணர்ச்சி இருந்தாலும் இன்னொரு தர்மசங்கடமும் உருக்கிட்டது. ஆளுங் கட்சியின் அமைச்சர் ஒருவர் தனது அன்றாட நிர்வாக நெருக்கடி

(7-ம் பக்கம் பார்க்க)

# மாதச் சம்பளப் போராட்டத்தில் இ. தொ. கழகமும் பங்கு பற்றும்

## துணைத் தலைவர் கெங்கரத்தினம் அறிக்கை!

"தொழிலாளர்களின் உயர்வுக்கு நல்ல திட்டங்கள் எங்கிருந்து வந்தாலும் அதை நாம் முழுமனதுடன் ஆதரிப்போம். இதில் தொழிற்சங்க வேறுபாடுகளுக்கு இடம் கொடுக்கமாட்டோம்.

தொழிலாளர்களுக்கு மாதச் சம்பளம் தரப்படல் வேண்டும் என்ற கோரிக்கையை 1964ம் ஆண்டு நாம் எமது மகாநாட்டில் முன் வைத்தோம் அன்று முதல் இன்றுவரை அதற்கான ஆக்க பணிகளில் ஈடுபட்டுழைத்துவருகிறோம். இதே அடிப்படையிலும், தொழிலாளர்களுக்கு இன்று ஏற்பட்டிருக்கும் வாழ்க்கைச் செலவு உயர்வு, வேலையில்லாத் திண்டாட்டம் போன்ற ஏனைய விடயங்களையும் நன்கு பரிசீலித்த பின்னரே இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் நடாத்தவிருக்கும் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தத்தில் கலந்துகொள்வதென முடிவு செய்துள்ளோம்.

இவ்வாறு இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் துணைப்பொதுச் செயலாளர் திரு க. கெங்கரத்தினம் அவர்கள் பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையொன்றில் கூறியுள்ளார்.

எதிர்வரும் 15-ம் திகதி நடைபெறவிருக்கும் அடையாள வேலை நிறுத்தம் பற்றி பரிசிலனை செய்வதற்காக கழகத்துணைத்தலைவர் திரு. அ. ந. சின்னத்தம்பி அவர்கள் தலைமையில் 4/2/73-ல் அட்டன் அலுவலகத்தில் இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் செயற்குழு கூட்டம் கூடி மேற்படி வேலை நிறுத்தத்தில் இலங்கைத் தொழிலாளர் கழகமும் பங்கு பற்றுவதென தீர்மானித்தது இதையொட்டி வெளியிடப்பட்ட அறிக்கையில் திரு. கெங்கரத்தினம் அவர்கள் மேலும் தெரிவித்திருப்பதாவது!—

"எல்லாத் துறைகளிலும் இன்று புறக்கணிக்கப்பட்டுள்ளவர்கள் மலையகத்தமிழ் தோட்டத்தொழிலாளர்களேயாவார்கள் இவர்களது உயர்வுக்கு போராட வேண்டியது தொழிற்சங்கங்களினது கடமையாகும். தொழிற் சங்கங்கள் பல்வேறு கோணங்களில் இருந்து வரினும் தொழிலாளர்களின் உயர்வுக்கு ஒருசிறு நன்மை தானும் ஏற்பட வழியேற்படும் போது வேற்றுமைகளை மறந்து ஒன்றுபட்டு செயல்பட்டால்மாத்திரமே தொழிலாளர்களின் வாழ்வு வளம் பெற வழி செய்தவர்களாவோம். இதைவிடுத்து தத்தமது நன்மைகளை கருதி பல பிரச்சினைகளையும் பல எண்ணங்களையும் நாம் உருவாக்கிக்கொண்டுவந்தோமானல் தொழிலாளர்களுக்கு நன்மை செய்பவர்களாக இருக்கமுடியாது.

தோட்டத் தொழிலாளர்களுக்கு மாதச்சம்பளம் வேண்டும் என்ற தீர்மானத்தை தோட்டத்தொழிலாளர்கள் அங்கம் வகிக்கும் எல்லாத் தொழிற்சங்கங்களுமே எடுத்துள்ளன. இருந்தும் ஒற்றுமையாகப் போராடாமல் பல கூறுகளாகப் பிரிந்திருந்து வருவதனால் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் மாதச்சம்பளம் கானல் நீராகவே இருந்து வருகிறது. இந்நிலையில் தொழிற்சங்கங்கள் நீடிக்கவிடக்கூடாது. எல்லாத் தொழிற்சங்கங்களும் தங்களது மாநாடுகளில் தொழிலாளர்களின் பிரச்சினைகளை வென்றெடுக்க ஒற்றுமைப்படல் வேண்டும் என்ற தீர்மானங்கள் எடுத்துள்ளன வெனினும் இதுவரை அது வெறும் கோஷமாகவே இருந்து வருகிறது. இந்நிலையை நீடிக்கவிடாது இவ்வேலை நிறுத்தத்தில் கலந்து நமது பலத்தைகாட்டவேண்டும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுதந்திரன் கருத்தரங்கம்

# தமிழாராய்ச்சி மாநாட்டை ஒத்திவைப்பதே உகந்தது!

இலங்கையில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள தமிழராய்ச்சி மகாநாடு பற்றிய இரு வாசகர்களின் கருத்துக்களை வாசித்தேன். தன்மானமுள்ள தமிழர் அனைவரினது கருத்தையும் உணர்ச்சியையும் அவை பிரதிபலிக்கின்றன.

ஜனாதிபதியும் பிரதமரும் மகாநாட்டை ஆரம்பித்து வைக்கும் ஒழுங்கைச் செய்வதற்காக கழகம் கண்டிக்கப்பட்டுள்ளது. ஆனால் அது பண்டுநாள் தொட்டு உள்ள சம்பிரதாயமாகும். கோலாலம்பூர் மகாநாட்டை துங்கு அப்துல் ரகுமானும் தமிழ்நாடு மகாநாட்டை பாரத ஜனாதிபதியும் தான் ஆரம்பித்து வைத்தார்கள். அதுதான் சிறப்பு. ஆனால் தமிழ்மொழிக்கும் இனத்துக்கும் இழந்த உரிமைகள் மகாநாட்டுக்குமுன் கிடைக்கப்பெறல் வேண்டும். உண்மையான தமிழ்த்தலைவர்களான தமிழர் கூட்டணியினரிடம் மகாநாட்டின் முழுப் பொறுப்பும் ஒப்படைக்கப்படவேண்டும். அத்தகைய நிலை ஏற்படும்வரை இலங்கையில் மகாநாடு நடத்தும் எண்ணத்தை அறவே கைவிட வேண்டும்.

வைத்திய கலாநிதி ஆனந்தராஜன் இனத்துரோகம் செய்து பழக்கப்பட்டவருமல்ல, அப்படிச் செய்ய வேண்டிய தேவையும் அவருக்கில்லை. என்றாலும் அவர் தப்புக்கணக்குப் போடுகிறார் என்பதை ஒத்துக்கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது. தான் துரோகியாக மாறுவதைத் தவிர்க்கமுடியாத நிலையில் அவர் தன்னை ஈடுபடுத்திவருகிறார். நயவஞ்சகர்களின் திருகுதாளங்களை அறிந்துகொள்ளக் கூடிய அனுபவமோ ஆற்றலோ அவருக்கு இல்லை என்பது இப்பொழுதே தெளிவாகிவிட்டது. அவரது பல பழைய நண்பர்கள் அவரை அவரது புது நண்பர்களின் பிடியில் நின்றும் காப்பாற்ற வேண்டும்.

ஆற்றோடு போய்க்கொண்டிருந்த கரடியைத் தவறுகக் கம்பளிப் பொதி என்று நினைத்து அணைத்து, பின், "நான் விட்டாலும் கம்பளி என்னை விடுகிறதில்லை," என அங்கலாய்த்தவன் நிலைக்கு ஆனந்தராஜன் போய்க் கொண்டிருக்கிறார்.

நல்லவர்என்று இதுகாறும் பெயரெடுத்த மதிப்புக்குரிய ஆனந்தராஜனிடம் தமிழின் பெயரால் கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன். தங்கள் ஆர்வத்தைச் சிறிது கட்டுப்படுத்திவிட்டுச் சிந்தித்துப் பாருங்கள். இலங்கையில் எமது இப்போதைய நிலையில் மகாநாடு நடத்தினால், உயிருக்குத் தத்தளித்துக் கொண்டிருப்பவனைக் கவனியாமல் மணவிழா கொண்டாடுவது போலத்தான் இருக்கும். மேலும் இங்கு தமிழுக்கு ஒருவித ஆபத்தும் இல்லை என்ற பொய்ப்பிரசாரத்தை மேலும் வலுப்படுத்தும்.

இலங்கையில் தமிழ் அரசியலோடு பின்னிப்பிணைந்து இருப்பதை அறிந்துகொள்ளும் அறிவாற்றல் தங்களுக்கில்லாமலில்லை. ஆகவே மகாநாட்டில் அரசியல் பேசப்படுவதை தவிர்ப்பதென்பது இயலாத காரியம், இயற்கையாகவுமிராது. கொடுமைக்கு ஆளாகியுள்ளவர்களை நீவிர் அடக்கலாம்; ஆனால் கொடுமையை இழைப்பவரும் அவர்களோடு இணைந்துள்ள தமிழ் இனத்துரோகிகளும் பொய்ப் பிரச்சாரம் செய்யத்தான் செய்வார்கள். மறைமுகமாக மகாநாட்டில் பிரதமர் அரசியல் பேசினால் உங்களால் அவரை வெளியேற்ற முடியுமா என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.

சமீபகாலத்தில் நடைபெற்ற நாவலர் விழாவை நினைவுபடுத்திப் பாருங்கள். அதில் கலந்திருந்த துரோகத்தைவிட அதிக துரோகத்தைத் தாங்கள் நடாத்தவிருக்கும் மகாநாட்டில் எதிர்பார்க்கலாம். நாவலர் விழாவுக்கு இருந்த எதிர்ப்பைவிட பன்மடங்கு எதிர்ப்பு இருக்கும். அதை உங்களால் சமாளிக்கமுடியாது.

சூதுவாது அறியாத தங்களைப் பயன்படுத்தி நயவஞ்சகர்கள் தங்களுக்கேற்றவிதத்தில் ஒழுங்குகள் அனைத்தையும் செய்விப்பார்கள்; உள்ளூரிலேயும் பிறநாட்டிலும் உள்ள கயவர்கள் முன்னணியில் நிற்பார்கள். நல்லவர்கள் புறக்கணிக்கப்படுவார்கள். உலகத்திலேயே தமிழுணர்ச்சிக்கு வித்திட்ட தந்தை செல்வாவுக்கு உரிய இடம்மகாநாட்டில் கொடுக்கப்படும் என்று தங்களால் உத்தரவாதம் கொடுக்கமுடியுமா? தமிழக முதல்வர் கருணாநிதி அழைக்கப்பட்டு தகுந்த முறையில் சிறப்பிக்கப்படுவார் என்று தாங்கள் நம்புகிறீர்களா? கடைசி நேரத்தில் அவரது வருகை அரசாங்கத்தால் தடைப்பட்டால் அந்த அவமானத்தையும் தாங்கிக்கொண்டு உயிர்வாழ்வீர்களா?

மதிப்புக்குரிய ஆதனந்தராஜன் அவர்களே! தாங்கள் உடனே தங்கள் இணைச் செயலாளர் பதவியைத் துறந்து, இதுவரை செய்துவந்த நல்ல தொண்டுகளைத் தொடர்ந்து செய்துவாருங்கள். முடியுமானால் உங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தி, ஏற்ற சூழ்நிலை உருவாகும்வரை இலங்கையில் தமிழாராய்ச்சி மகாநாடு நடைபெறாமல் செய்யுங்கள். கூடிக்கொண்டு வரும் இனத்துரோகக் கும்பலைப் பெருக்கி நீங்களும் அதில் கலந்துகொள்ளாதீர்கள்!

—"நீர்கொழும்பான்"

நீர்கொழும்பு.
28-1-73.

# தமிழ் மக்களின் உணர்ச்சியை மதித்திட தனிநாயக அடிகளார் முன்வர வேண்டும்!

குடியரசின் பேரால் பழந் தமிழக் குடிகளை குப்பை என ஒதுக்கி, குலநாசம் செய்ய, நாளுக்கு நாள் சதித்திட்டிச் சுவை காணும் எங்கள் இலங்கை அரசு; தமிழர் உரிமைக்கு ஊறுவிளைக்கும் சட்டங்களை ஆக்கியபோது, கூறுவேறுபட்டிருந்த தமிழ்க் கட்சிகள் ஒன்றுகூடி கூட்டணி அமைத்து சர்வாதிகாரப்பனியை, 'உதயசூரியன்' என்னும் கொடிமூலம் ஒழித்துக்கட்டக்கங்கணம்கட்டி, ஆளும் அரசுக்கு ஆறு அம்சக் கோரிக்கை அனுப்பியும் குறைந்த பட்ச உரிமையாவது வழங்குங்கள் என்று பணிந்த போதும், அதிகாரமமதையால் கோரிக்கைக்குச் செவிசாய்க்காமல் புறக்கணித்துவிட்ட அரசு, தமிழினத்தின் 'சாபக்கேடு'களான ஒரு சில தமிழர்களைத் தன்வசத்தே வைத்துக் கொண்டு அவர்கள் மூலமே ஈழத்தில் தமிழர்களைப்படிப்படியாக அழித்துவிட என்றும் தயாராயிருக்கும் எங்கள் அரசு, தமிழாராய்ச்சி மகாநாட்டுக்கு அனுமதி கொடுத்துள்ளதென்றால் நாம் ஆச்சரியப்படாமல் வேறென்ன செய்ய முடியும்?

இதுவும் 'ஆறுமுகநாவலர் நினைவுமண்டப விவகாரம்' தான் அன்றி வேறல்ல! இன்னுமொன்று; காங்கேசன்துறை இடைத்தேர்தலுக்கு ஒரு பிரச்சாரத்திற்கும் தமிழ் எட்டப்பர்களுக்கு தமிழ், காக்கை வன்னியர்களுக்கு, ஒரு 'வசதி' இனியென்ன? முழக்கித்தள்ளுவார்கள்! எது எப்படியும் இருக்கட்டும்! நமக்கு அடிமையிலும், சூழ்ச்சி வலைகளிலும் ஆயிரம் தடவை பழக்கப்பட்ட எமக்கு—இது ஒரு பெரிய 'காரியம்' அல்ல:

மகாநாட்டுக்கு பிரதமர்—ஸ்ரீலங்கா குடியரசின் பிரதமர் வருவாராம்; விழாவை ஆரம்பித்துவைக்க; எப்படி சிரிப்பு? ஒரு ஐந்து ருபா கொடுக்கலாம் இந்தச் சிரிப்புக்கு! பிரதமர் என்ன மொழியில் மகாநாட்டை ஆரம்பித்து வைப்பார்? சிங்கள மொழியில்!—இது நிச்சயம்—நிச்சயம்!! ஆகாகா! தமிழாராய்ச்சி மகாநாடு சிங்களத்தில் ஆரம்பித்து வைக்கப்படும்! என்னே! தமிழ் ஆராய்ச்சிக் குழுவினரின் மூளை! சந்தேகம் வேண்டாம் சூரியரின் கும்பல் தமிழாராய்ச்சிக் குழுவினருள் விளையாடுகிறது. விரைவில் அவர்கள் யார் என்று தெரிந்துவிடும்!

ஒரு தமிழ்த்தலைவன் இந்த உலகத்தில் கிடைக்கவில்லையா இவர்களுக்கு! சே! வெட்கம்! வெட்கம்!!

உலகத்தில் எங்கெங்கு தமிழர் வாழ்கின்றார்களோ அவர்கள் மனதில் நீங்காது நிறைந்து கொண்ட இதய தெய்வம்—பேறிஞர் அண்ணாவின் உளங்கவர் தம்பி—டாக்டர் கலைஞர்—தமிழக முதலமைச்சர் மாண்புமிகு கருணாநிதி இருக்கிறாரே! இவரைவிட தமிழருக்கு இன்று தலைவராக இருக்கும் யோக்கியதை யாருக்கு உண்டு? அவர்தான் போகட்டும்! அவர்தான் ஒருவர்தான் ஒரு தமிழாராய்ச்சி மாநாட்டை முன்னின்று நடாத்திவெற்றி கண்டவராயிற்றே! ஈழத் தமிழகத்தில் இருக்கவே இருக்கிறாரே எங்கள் தந்தை செல்வா! 25 லட்சம் தமிழர்களின் இதயங்கவர்ந்த தமிழ்க்கிழவன் அல்லவா இவர்! இவரல்லவா மாநாட்டைத் திறந்து வைக்க வேண்டும்?

இவர்களெல்லாம் அரசியல் பேசுவார்களாம்? அவ்வளவு முட்டாள்களல்ல அவர்கள்? கடமையில்நேர்மையும்எதிரிகள் போற்றும் பண்பும் நிரம்பப்பெற்ற இந்தத் தலைவர்கள் அவ்வளவு மடைத்தனமான காரியத்தை ஒரு போதும் செய்யமாட்டார்கள். இதை மாநாட்டுக் குழு நன்கு உணர்துகொள்ள வேண்டும்.

கருணாநிதியாயினும், எம். ஜி. ஆர் ஆயினும் 'கட்டுரை' கொடுக்கும்போது தணிக்கை செய்யப்படுமாம்! ச்ச! கட்டுரை கொடுக்கத்தான் கருணாநிதிக்கு இடம் உள்ளது போலும். அவ்வளவு 'இலேசாக' எண்ணிக் கொண்டார்கள் இந்த மாநாட்டுக்குழுவினர் கருணாநிதி சிந்திக்கத் தெரிந்தவர்; அவருக்கு எல்லாம் புரியும்! உலகத் தமிழர்களின் ஒரு பெரும் தலைவர் கருணாநிதிக்கு 'கட்டுரை' கொடுக்குமளவுக்குத்தான் மகாநாட்டில் இடமுண்டென்றால் மற்றவர்களுக்கு எப்படி?

நிச்சயம் இது தமிழாராய்ச்சி மகாநாடல்ல! கட்டுரை மகாநாடாகத்தான் இருக்கப்போகிறது. இப்போதே தமிழாராய்ச்சி மகாநாட்டுக் குழுவில் அரசின் தமிழ் எட்டப்பர்களின் ஊடுருவல்களும், ஊழல்களும் ஏற்பட்டுவிட்டன, இனி என்னென்ன நடக்கப்போகிறதோ யாரறிவார்! ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம்! இலங்கையில் வேறுபாடுகளை மறந்து ஓரணியாகத் திரண்டு நிற்கும் தமிழர் கூட்டணியில் உள்ள சிறந்த பேச்சாளர்களான நாவலர் அமிர்தலிங்கம், சொல்லின் செல்வன் இராசதுரை, பண்டிதர் க. பொ.

(9ம் பக்கம் பார்க்க)

# தமிழாராய்ச்சி மாநாடு குறித்து தமிழர் கூட்டணியின் நிலையென்ன?

அ. அமிர்தலிங்கம்
(செயலாளர் நாயகம்-தமிழர் கூட்டணி!)

அடுத்த ஆண்டின் ஆரம்பத்தில் நடைபெற இருக்கும் நான்காவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு பற்றிப் பத்திரிகைகளில் பல அறிக்கைகள் வெளிவந்திருக்கின்றன. இவ் அறிக்கைகள் எவ்வளவு தூரம் உத்தியோகபூர்வமானவை என்பது தெரியவில்லை. ஆயினும் எவ்வித உறுதியான முடிவுகளும் எடுக்கப்படுவதற்கு முன்பு இம்மாநாட்டையொட்டி தமிழர் கூட்டணியின் நிலையைத் தெளிவாகத் தமிழ் பொதுமக்கள் முன்வைக்க வேண்டியது எம் கடமையாகின்றது.

தமிழ் நாட்டுக்கு அடுத்தபடியாகத் தமிழ் மக்கள் எண்ணிக்கையிலும், பாரம்பரியம், பண்பாடு ஆகியவற்றிலும் தம் சொந்தப் பிரதேசத்திலும் மேலோங்கி வாழும் நாடு இலங்கையாகும். எனவே 1968ம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற இரண்டாவது மாநாடு தமிழ் நாட்டில் ஏற்படுத்தியது போன்று ஓர் எழுச்சியை ஈழத் தமிழகத்திலும் இம்மாநாடு ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கலாம்.

சென்னையில் நடைபெற்ற மாநாடு இரண்டு அங்கமாக நடைபெற்றது. அறிஞர்கள் கூடி ஆராய்ச்சிக் கட்டுரைகளை ஆங்கிலத்திலோ தமிழிலோ வாசித்த மாநாடு ஒருபுறமும், தமிழ் இனத்தின் கலாச்சார எழுச்சியைப் பிரதிபலித்து அதே நேரத்தில் உலக அறிஞர்கள் உரைகள் ஆற்றித் தமிழ் மக்களோடு கலந்து கொண்ட மாநாடு தீவுத்திடலில் அமைக்கப்பட்ட பூம்புகார் நகரில் ஒருபுறமாகவும் நடைபெற்றன. கோலாலம்பூரிலும் பாரிசிலும் நடைபெற்ற 1ம் 3ம் மாநாடுகளுக்கும் சென்னையில் நடைபெற்ற 2வது மாநாட்டுக்கும் உள்ள வித்தியாசம் இதுவாகும்.

யாழ்ப்பாணத்தில் நடைபெறும் மாநாடு சென்னை மாநாட்டின் அளவில் இல்லாவிட்டாலும் அதே தரமானதாக அமையவேண்டும். அது தமிழ் மக்களுடைய மாநாடாக தமிழ் மக்களால் நடாத்தப்படும் மாநாடாக நடைபெற வேண்டும். நான்காவது மாநாட்டு நிர்வாகிகள் இக்கண்ணோட்டத்தோடு மாநாட்டை நடாத்துவதாயின் தமிழர் கூட்டணி தன் பரிபூரண ஒத்துழைப்பைக் கொடுக்க ஆயத்தமாயிருக்கிறது.

ஆனால் சில பத்திரிகைகளில் வெளிவந்த அறிக்கைகளிற் கண்டதுபோல பிரதமரையும் வேறு அமைச்சர்களையும் அழைத்து நடாத்தும் விழாவாக இம்மாநாடு நடைபெறுவதாயின் தமிழர் கூட்டணி தன் தீர்மானப்படி அவர்களின் வருகையை எதிர்க்கவே செய்யும்.

அமைச்சர்களை அழைப்பது ஒரு சிலரை அரசாங்கத்தின் செல்லப்பிள்ளைகளாக்க உதவுமேயன்றித் தமிழ் ஆராய்ச்சிக்கோ தமிழ் பண்பாட்டு வளர்ச்சிக்கோ எவ்விதத்திலும் பயன்படமாட்டாதென்பதே கூட்டணியின் கருத்து.

இலங்கைத் தமிழ் மக்களுக்கும் தமிழ்நாட்டுக்குமிடையிலுள்ள கலாச்சாரத் தொடர்புகளை துண்டித்து, எம் பாரம்பரியத்தையே சிதைக்கக்கூடிய பல நடவடிக்கைகளை எடுத்துவருகின்றது அரசாங்கம். தமிழ்மொழிக்கு அரசியல் அமைப்பில் உரிய இடம் அளிக்க மறுத்துத் தமிழ் மக்கள் ஏகோபித்து அந்த அரசியல் அமைப்பை எதிர்த்து நிற்கின்றார்கள். இவற்றுக்குப் பொறுப்பான பிரதமரையோ அமைச்சர்களையோ தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு அழைப்பதாயின் தமிழ் மக்கள் அதை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்.

மாநாட்டு நிர்வாகிகள் தமிழ் மக்களின் உணர்ச்சிகளை மதித்து விழா ஒழுங்கு [illegible] இருேம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காங்கேசன்துறையில் கட்டுப்பணத்தைக் காப்பாற்ற மாஸ்கோ மனிதரின் புதிய சூழ்ச்சி!

## மூளைகழுவுதல் அங்கே! சிறிமா காலைக் கழுவுதல் இங்கே!

## வீர இளைஞர்களே விழித்தெழுங்கள்!

### இனத்துரோகிகளுக்குப் பாடம் புகட்டுங்கள்!!

காங்கேசன்துறைத் தொகுதியிலுள்ள மக்கள் உணர்சி கொண்டவர்கள். மான உணர்ச்சி மிக்கவர்கள். தமிழினத்தின் தலைவரைத் தேர்ந்தெடுத்த மறத் தமிழர் வாழுந் தலைநகர் காங்கேசன்துறை. அமரர் வன்னியரைப் பெற்றெடுத்ததிருநகர். அத்தொகுதியில் வாழுகின்ற மான உணர்வு கொண்ட பல்லாயிரம் மாணவரும் இளைஞரும் தமிழ்க்கிழவன் தந்தை செல்வாவின் விடுதலைப் படைத் தோழர்கள்-தந்தை செல்வா புதிய அரசியலமைப்பை எதிர்க்கிறார் என்றால் தமிழினம் ஏற்கவில்லை என்பதுதான் முடிவு.

சிங்கள ஆட்சி மன்றத்திலே பதவியைத் துறந்து தேர்தலில் நிற்குமாறு சிங்கள அரசுக்கு விடுத்த சவாலை அதிகாரம், படை பலம் கொண்ட சிங்கள ஆட்சி ஏற்றிடத் துணியவில்லை —

தமிழ்ப் பகைவர் தலைவர் குமாரசூரியர் தந்தையின் தொகுதியிலே போட்டிக்கு வருவாரென்று நினைத்தோம வரவில்லை — தேர்தலையே நடத்தத் திராணியில்லை—

இப்போது சிங்களக் கம்யூனிஸ்ட் வீ. பொ. வை நிறுத்த இரகசியத் திட்டமாம் — இளைஞர்களுக்கு வலை வீசுகிறார்கள் — தேர்தலை நடத்தாது பின்போட்டதன் மர்மம் அம்பலமாகி விட்டது —

வ. பொ. வுக்கோ கம்யூனிசக் கொள்கையிலும், சித்தாந்தத்திலும் தடுமாற்றம் குழப்பம்! அவருக்கு மட்டுமல்ல பீற்றர் கெனமன் கும்பல் ஒரு பக்கம் விக்கிரம சிங்கா கும்பல் மறுபக்கம் — இதனால் மூளை கலங்கி இரத்தம் உறைந்துபோன பொன்னம்பலம் புதிய பலம் பெற-(*Brain Washing*) மூளை கழுவி வர சிறீமாவோவின் ஆசி பெற்று ருசியா சென்று வந்திருக்கிறார்—

தேர்தல் இனி நடைபெறலாம் — வந்தவுடன் சிறுபான்மையினர் பிரச்சினைகள் தீர ருசியாவைப் பின்பற்ற வேண்டுமென்று புதிய சாமியார் பழைய உபதேசஞ் செய்கிறார் —

பொருளாதாரப் பிரச்சினை தீரவேண்டுமானால் சிறுபான்மையினர் உரிமைகள் வழங்கப்பட வேண்டுமென்று பேசுகிறார்கள் — அடிக்கடி மூளை கழுவிக் கொள்வது எவ்வளவு நல்லது — ஆனால் சிங்கள மக்களிடம் இதைச் சொல்லும்படி ருசியா, மூளையைக் கழுவி விடவில்லைப் போலும்—

இளைஞர்களை தமக்கு வாக்களிக்கச் செய்யக் காங்கேசன்துறைத் தொகுதிக்கு நிறைய வேலைவாய்ப்பளிக்கத் திட்டமிட்டுள்ளனராம்- அரசாங்கத்துறைகளில் எல்லாம் போதிய அளவு வேலைகளை பெற்றுக் கொடுப்பதன்மூலம் கட்டுப்பணத்தை எடுத்துவிடப் புதிய திட்டம் ஒவ்வொரு கம்யூனிஸ்ட் தோழரும் பத்துப்பேர்களை யாவது வேலைக்குச் சேர்த்து விடுவதென்று தீர்மானித்து விட்டனர்—

எல்லோருக்கும் வேலை வழங்காது விட்டாலும் ஆயிரக் கணக்கில் இளைஞர்களைப் பிடித்துவிட்டால் தமிழ் உரிமை — மான உணர்ச்சி கொண்டவர்களின் இரத்தோட்டம் நின்றுவிடுமென்று இரவு பகலாக ஆலாய்ப் பறக்கிறார்கள்—

பட்டங்கள் பதவிகள் பெற்றுவிடப் பல துரோகிகள் தயார் என்று சவால் விடுகிறார்கள் — என்னே கம்யூனிஸ்ட்டுகளின் புதிய புரட்சித்திட்டம் —

1973ல் பெரும் புரட்சிகள் கொள்கை மாற்றங்கள் ஏற்படலாமென்றால் காங்கேசன்துறையில் எதிர்பார்க்கலாம் — அவர்கள் திட்டங்கள் அம்பலம்! பொன்னர் இங்கே பலம் ருசியாவிலே— பார்த்தீர்களா சிறீமாவோ தந்திரத்தை — பலே!

மாவை சேனாதிராசா.

---

# ஈழத் தமிழினமும் பேரறிஞர் அண்ணாவும

உலகத் தமிழர் தலைவன் பேரறிஞர் அண்ணா அவர்கள் இவ்வுலக வாழ்வை முடித்து இன்று நான்காண்டுகள் முற்றுப்பெற்று விட்டன ... அறியாமையிலும், மூட நம்பிக்கைகளிலும் தேங்கிக் கிடந்த தமிழ் சமுதாயத்தை தனது தனித் திறமையினாலும், பேனாமுனையினாலும் தட்டியெழுப்பி தமிழகத்தில் ஒரு புதுமைப் புரட்சியை ஏற்படுத்திக் காட்டிய பேரறிஞரை தமிழ் சமுதாயம் என்றுமே மறக்க முடியாது. உலகில் வாழ்கின்ற பல இன மக்கள் மத்தியிலும் காலத்திற்குக் காலம் ஒவ்வொரு தலைவர்கள் தோன்றுவதும், அவரவர் ஆற்றலுக்கேற்ப, சமுதாயத்துக்குத் தொண்டு புரிந்து விட்டு இறந்துபோவதும் இயற்கை தானென்றாலும், ஒரு சிலர் இறவாப் பெரும் புகழைப் பெற்று விடுகின்றார்கள். தனக்கென்று வாழாது பிறர்க்கென்று வாழ்வதென்பது இலேசானதொன்றல்ல— தானும் தனது இனபந்துக்களும் மாத்திரம் வாழ்ந்தால் போதும் இனம் எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை யென்று தனது இனத்தையே மாற்றானுக்குக்காட்டிக் கொடுக்கும் கயவர்கள் மலிந்து விட்ட இக்கால கட்டத்தில்தான், தன்னைப் பற்றிச் சிந்திக்காது தனது இனம் வாழவேண்டுமென்று தங்களையே அர்ப்பணித்த தியாகிகளை எண்ணிப் பார்க்கவேண்டியிருக்கின்றது.

### அண்ணாவும் சமயமும்

—அண்ணா அரசியலில் புகுந்த ஆரம்பக்கட்டத்தில் பல வித நெருக்குதல்களையும் அவரால் சமாளிக்க வேண்டியிருந்தது. அவரது புரட்சிக்கருத்துக்களைப் புரிந்துகொள்ளாத மக்கள் அண்ணா ஒருநாத்திகன். கடவுளை நிந்திப்பவன் என்றெல்லாம் மனப்பீதிகொண்டு எதிர்த்தார்கள். அந்நேரத்திலே தான் அண்ணாமேடை ஏற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்

**சி. க. சண்முகநாதன்**

பட்டது. ''எந்தக் கலையின் மூலம் மக்களிடையே மூட நம்பிக்கைகளும், பழக்க வழக்கங்களும் புகுத்தப்பட்டதோ, அந்தப் பழக்கவழக்கத்தை அகற்றவும் அதே கலையைத்தான் பயன்படுத்துகின்றோமென்று அந்நேரத்திலேயே, மிக ஆணித்தரமாக அண்ணா எடுத்தியம்பியிருக்கின்றார். ஆரம்பத்தில் எதிர்த்தவர்களும் பின்னர் அவரது கருத்துக்களையெல்லாம் சிந்தனைக்கெடுத்ததோடு மட்டுமன்றி ஆட்சிப்பொறுப்பையும் அவரிடம் ஒப்படைத்தார்கள். ஒரு அமைதிப்புரட்சியை ஏற்படுத்தி தமிழாய்ந்த தலைமகனை மக்கள் தமிழ் நாட்டின் முதல் மகனாக்கினார்கள். அண்ணா ஆட்சிக்கு வந்தால் சமயம் அழிந்து விடும் நாத்திகம் தலை விரித்து ஆடுமென்ற நச்சுப்பிரச்சாரத்துக்கெல்லாம் ஒரு முற்றுப்புள்ளியும் வைக்கப்பட்டது. பலவருட காலம் ஓடாமலிருந்த திருவாரூர்தேர் ஓடியது யாரது ஆட்சிக்காலத்தில்? அறநிலையங்களைப் பாதுகாக்கவென்றே அதற்கொரு அமைச்சை நிறுவியது யாரது ஆட்சிக்காலத்திலென்பதை யெல்லாம் தமிழினம் சிந்தனைக்கெடுத்துப்பார்க்கவேண்டும்.

### ஈழத்தமிழ் மக்களும் அண்ணாவும்

—தான் வாழ்ந்த நாட்டு அரசியலோடு மாத்திரம் நின்றுவிடாது உலகில்,எங்கெல்லாம் தமிழ் மக்கள் பரந்து வாழ்கின்றார்களோ அவர்களின் மீது மிகுந்த அக்கறையுள்ளவராகவும் அவர்கள் எங்கு வாழ்ந்தாலும் உரிமைபெற்றவர்களாக வாழவேண்டுமென்று அவாக்கொண்டவராக விளங்கினார். அன்று...! ஈழம் வாழ் தமிழர் நடாத்திய போராட்டங்களுக்கெல்லாம் தனது தார்மீக ஆதரவை நல்கியதோடு நின்றுவிடாது பெரிய கண்டன ஊர்வலங்களையும் நடாத்திக் காட்டிய பேரறிஞரை ஈழத்தமிழினம் மறப்பதற்கில்லை. ஒரு மனிதன் இவ்வுலக வாழ்வை முடித்து விடப்போகின்றானென்ற அந்த இறுதிக் கட்டத்திலே உரித்தானவர்கள் தங்களது இறுதிக் கடனைச் செலுத்துவதுபோல அண்ணாவின் உயிர் பிரியப்போகின்ற அந்தக் கட்டத்திலே ஈழத்திலிருந்தும் மருந்து அனுப்பப்பட்டு அவரது உடலில் ஏற்றப்பட்டதென்றால் அது எமது உரிமையைப் பிரதிபலிப்பதாகத்தானே இருக்கும். அண்ணா எம்மீது வைத்திருந்த பற்றுக்கு நன்றிக் கடன் புரிவது போலல்லவா அது அமைந்து விட்டது.

(9-ம் பக்கம் பார்க்க)

---

# தமிழினத்துக்கு கொடுமைக்குமேல் கொடுமை!

## தமிழர்கூட்டணி இனியும் பொறுப்பதுமடமை!!

இன்று இலங்கை முழுவதும் சிங்கள மயமாக்கும் முயற்சி தீவிரமாக நடைபெற்று வருகிறது. அதை நாம் பத்திரிகையில் மட்டும் எழுதிவிடுவால் எங்கள் பணி முடிந்து விட்டது என்று கருதிவிடக் கூடாது. சிங்கள ஆசிரியர்கள் தமிழ் பாடசாலைக்கு அனுப்பப்படுவதை எதிர்த்தெழுதியதோடு அது அடங்கிவிட்டது. ஆட்சியினரோ தங்கள் திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள்! அதை நிறைவேற்றுவதிலும் கண்ணுங் கருத்துமாக இருக்கிறார்கள்.

காங்கேசன்துறையில் சிங்களக் குடியேற்றத்திற்கு ஏற்பாடாகி வருகிறது. அதை 'சுதந்திர'னில் கண்டித்து எழுதியுள்ளீர்கள்! அத்துடன் தமிழர் கூட்டணி தலைவர்களும் இரண்டு மூன்று கூட்டங்களில் எதிர்த்துப் பேசுவார்கள் அத்தோடு அது சரி, ஆனால் ஆட்சியினர் திட்டமிட்டபடி திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றனர்.

புத்தூரில் தமிழ்பாடசாலை பௌத்த சிங்கள பாடசாலையாகிறது. கண்டித்து எழுதினீர்கள். கண்டபலன்?

இன்று தமிழ் பிள்ளைகளுக்கு — பாரம்பரியமான தனது தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டு — சிங்களம் போதனா மொழியாக்கப்பட்டிருக்கிறது!

எழுதுவீர்கள் எதிர்த்து! என்ன பலன்?

இந்த அரசாங்கத்தை 'தமிழைப்பாதுகாக்கும் அரசாங்கம் — அவர் நாவலர் — இவர் விநோபாஜி' என்று சுத்தப் பைத்தியகாரத்தனமாகப் பித்தலாட்டம் ஆடுகிறார்கள் முழு முட்டாள்கள் மானம் ரோசமற்ற மரக்கட்டைகள்.

'சர்வோதயம்' பேசி 'சாராயம்' கொடுத்து வாக்குக்கேட்ட இந்த பைத்தியம் பிடித்த கதிரவேலு என்ன தான் தலை குத்தனை நின்றாலும் எமக்கென்ன?

சோசலிசம் பேசி 'தரகுப் பணம் பெற்று' முதலாளிகளாகும் இந்த 'முற்போக்கான' நாளில் வளர்ந்து வரும் பிள்ளைகளுக்கு உண்மையான சோசலிசத்திலும் கூட வெறுப்பு உண்டாக்குகிறது அரசாங்கம்!

துரோகிகளைக் காட்டி இவர்தான் நாவலர் என்று கூறினால் வளர்ந்து வரும் பிள்ளைகள் இப்படிப்பட்ட நாவலருக்கா விழா? ஏன் எடுக்க வேண்டும் என்று அவர்கள் மனம் எண்ணாதா? இதனால் தமிழ் பற்று மிகுந்த நாவலரையல்லவா தரம் காணமுடியாமல் வளரும் சந்ததி அவஸ்த்தைப்படப் போகிறது?

எனவே பெரியார்களின் பெயர்களை நாய்களுக்கும்,

**நயினை நாக-பஞ்சாட்சரம்**

பேய்களுக்கும் உவமை கூறுவதைத் 'தடுக்க சட்டம்' தான் கொண்டு வர வேண்டும்! ஆனால் நம்மால் இப்போது......!

எனவே இந்த எட்டப்பர் கூட்டத்தைப்பற்றி நமக்குக் கவலையில்லை. அவர்கள் பீத்தம் தலைக்கேறியவர்கள்! பித்தலாட்டம் ஆடியே திருவார்கள்! ஆடட்டும்!

ஆனால்—

இந்தத் தமிழர் கூட்டணி என்ன செய்கிறது மக்களுக்கு உபதேசம் செய்ததோடு மட்டும் நின்று விடப் போகிறதா?

புத்தூரில் சிங்கள மொழி போதனா மொழியாகிறதை எதிர்த்து புத்தூர் பாடசாலைக்கு (குறிப்பிட்ட) முன் சத்தியாக்கிரக இயக்கத்தை உடன் ஆரம்பிப்பார்களா!

அல்லது.

வேறு நடவடிக்கைகள் எடுப்பார்களா?

இது இன வெறியல்ல! இனவெறியர்களின் திட்டமிட்ட சதியை முறியடிக்கும் செயல்! கம்யூனிஸ்டுகளே இது பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன? இந்த நேரத்தில் ஊமையாகி விடுவீர்கள்!

அமைச்சர்களை வரவேற்பதில் காவடியாட்டம் ஆடும் எட்டப்பர்களே தமிழ் பிள்ளைகளின் போதனா மொழி சிங்களம் ஆகின்றதே உங்கள் அரசின் 'தேசிய ஒற்றுமை' இது தானா!

ஓடி மூலைக்குள் ஒதுங்குங்கள் அடுத்த அமைச்சரை வால்பிடிக்க அடுத்தவரின் வருகையைப் பார்த்துக் கொண்டு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாத பேட்டி

வான மண்டலத்தில் பயணம் செய்தபடி சுதந்திரன் வாசகர்களுக்கு யாருடைய பேட்டியை இந்த வாரம் தரலாம் என்று சிந்தித்துக் கொண்டிருந்த நான் திடீரென்று அளவெட்டியில் ஒரு வீட்டு முற்றத்தில் போய் இறங்கினேன். அளவெட்டி என்றதும் தோழர் வி. பொன்னம்பலத்தின் ஞாபகமும் வந்தது.

நான் இறங்கிய வீட்டு முற்றத்தில் உட்கார்ந்து யாரோ ஒரு மனிதர் 'சிரட்டையில்' தேநீர் குடித்தபடி இருக்கவே, 'சீச்சீ' இது தோழரின் வீடாக இருக்காதென்று மனதில் முடிவு செய்து கொண்டு அங்கிருந்து கிளம்ப முயன்றேன்.

''என்ன நாரத நிருபரே! வந்து விட்டு சொல்லாமல் கொள்ளாமல் ஓடுகிறீர்களே'' என்ற குரல் கேட்டு திரும்பிப்பார்த்தபோது தோழர் வீ. பி. அங்கு நிற்க காணப்பட்டார். அவரது கையில் சமதர்மம் என்ற நூலும் வேறு காணப்பட்டது.

கையில் சமதர்மம் — கண்ணால் காண்பது என்ன?—ஒரு தடவை எனது தலை சுற்றியது—சமாளித்துக்கொண்டு, ''உங்களைத்தான் பார்த்துப் பேசிவிட்டுப்போக வந்தேன்—இது உங்கள் வீடாக இருக்காதே என்றுதான் திரும்ப நினைத்தேன்...'' என்று கூறிக்கொண்டே வீ. பி.யை பின் தொடர்ந்தேன்.

''வா, வா, உன் தமிழர் கூட்டணியினர் என்ன சொல்லுகிறார்கள்?'' என்று கூறியபடியே ரஷியாவிலிருந்து கொண்டு வந்திருந்த மருந்தொன்றை ஊற்றிக் குடித்தார் தோழர்.

''தமிழர் கூட்டணி கிடக்கட்டும்—நீங்கள் வைத்தியம் செய்ய ரஷியாவுக்குப்போய் விட்டீர்கள் — எங்களைப் போன்ற ஏழைகளுக்கு நோய் வந்தால் எங்கே போவோம் என்று கேட்கிறார்களே பொதுமக்கள்?'' என்றேன் நான்!

''பொது மக்களுக்கென்ன? எதையாவது கேட்டபடி இருப்பார்கள். இதனால்தான் எங்கள் ரஷியாவில் வாய்ப்பூட்டுப் போட்டிருக்கிறார்கள் பொது மக்களுக்கு! அதுபோலவேதான் இங்கும் வாய்ப்பூட்டுப்போட பத்திரிகை மசோதாவைக் கொண்டு வரப்போகிறது எமது அரசு'' என்று கூறி நெஞ்சில் ஒரு தட்டுத் தட்டினார் வீ. பி.

''ரஷியா ரஷியா என்கிறீர்களே, ரஷியாவில் இன மொழிப்பிரச்சினைகள் இல்லவே இல்லையா?

''இல்லை, அங்கு எல்லா மொழிகளுக்கும் உரிமை தரப்பட்டுள்ளது. எல்லா இனங்களுக்கும் சுயாட்சி தரப்பட்டுள்ளது; ஒரு குலம் மற்றோர் குலத்தையோ, ஒரு மொழி மற்றோர் மொழியையோ ஓர் இனம் மற்றோர் இனத்தையோ அடக்கி ஆளும் நிலை ஏற்படவில்லை. தாய்மொழியில் கல்வி, பிரதேச மொழியில் நிர்வாகம் நடைபெறுகிறது...!''

''போதும் போதும் நிறுத்துங்கள் தோழரே...! ஈழத்தில் தமிழ்மொழி மீது சிங்கள மொழி ஆதிக்கம் செலுத்துகிறது— தமிழினம் மீது சிங்கள இனம் ஆதிக்கம் செலுத்துகிறது. தமிழ் மக்களின் சுயாட்சியுரிமை மறுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் ரஷியாவில் எல்லோருக்கும் சம உரிமை இருப்பதாக திருப்பித்திருப்பிக் கூறி யாருக்கு என்ன பயன்? ரஷிய அரசியலமைப்பை பின்பற்றி எல்லோருக்கும் சமத்துவம் அளிக்கும் வகையில் எங்கள் உடுவில் தர்மலிங்கம் அரசியல் நிர்ணய சபையில் தயாரித்தளித்த நகல் இணைப்பாட்சி அரசியல் திட்டத்தை உங்கள் கட்சி கூட ஏற்க மறுத்து விட்டதே...!'' என்றேன்.

''உனக்கு அரசியல் தெரியாது. எல்லாம் பொருளாதாரச் சீரழிவுதான் காரணம்—பொருளாதாரத் தன்னிறைவு ஏற்பட்டால் இந்நாட்டில் இனப்பிரச்சினை தீர்ந்து விடும்...! என்றார் வீ. பி.

''இப்படித்தான் கூறிவந்தீர்கள் இதுவரை ... ஆனால் உங்கள் சகா மெண்டிஸ், இனப்பிரச்சினை முதலில் தீர்க்கப்பட்டால்தான் பொருளாதார அபிவிருத்தி ஏற்பட முடியும் என்று உங்களை வைத்துக்கொண்டே ஒரே போடாகப்போட்டு விட்டாரே இனியும் இந்தப் பழைய பருப்பு தமிழ் மக்களிடம் அவியாதே...! என்றேன் நான்.

''நீ பத்திரிகைக்காரன்... உன்னோடு வாய்கொடுத்து தப்ப முடியாது —வரட்டும் வரட்டும் பத்திரிகைச் சபை மசோதா—உங்கள வாய்க்கு பூட்டுபோட்டு விடுகிறோம்'' என்று அலுத்துக் கொண்டார் தோழர் வீ. பி.

''அதற்குள் அலுத்து விடாதீர் தோழரே ... இன்னும் சில சந்தேகங்கள்...!

''சரி கேட்டுத்தொலை...'' என்றார் தோழர் சினத்துடன்!

''தமிழுக்கு அரசியல் சட்டத்தில் தகுந்த இடம்—போதிய இடம் தரப்படவில்லையென்பதை நீங்கள் ஒப்புக்கொள்ளுகிறீர்களா?

''ஒப்புக்கொள்ளாமல் என்ன? நானும் தமிழன் தானே ...'' இல்லாத மீசையை ஒரு தடவை முறுக்கி விட்டுக்கொண்டார் அவர்!

''தமிழுக்கு அரசியல் சட்டத்தில் கௌரவமான இடம் தரப்படவில்லை— தமிழினத்தின் உரிமைகள் காக்கப்படவில்லை. புதிய அரசியல் சட்டம் தமிழர்களுக்கு உரிமை வழங்கப்படக்கூடிய முறையில் திருத்தியமைக்கப்படவேண்டும் என்ற கோரிக்கையை வைத்துத்தானே தந்தை செல்வா காங்கேசன் துறை இடைத் தேர்தலில் போட்டியிடப் போகிறார்! அரசின் சார்பில் அவரை எதிர்க்கப் போகிறீர்களாம் நீங்கள்? என்ன சொல்லி வாக்குக் கேட்கப்போகிறீர்கள்?

''... ...... ...... ...''!

''சில மாதங்களுக்கு முன் 'வெள்ளி' இதழுக்கு அளித்துள்ள பதிலில் எந்தச் சிங்கள அரசும் தமிழர்களின் உரிமைகளை வழங்கியதுமில்லை — வழங்கப்போவதுமில்லை என்று கூறியிருக்கிறீர்களே...அதே சிங்கள அரசின் சார்பில்—தமிழர்களுக்கு உரிமை வழங்க மறுக்கும் அரசின் சார்பில் — தமிழர் தலைவரை எதிர்த்துபோட்டியிடப்போகிறீர்களே... என்ன சொல்லி வாக்குக் கேட்கப்போகிறீர்கள்?

இதற்கும் பதில் வரவில்லை அந்த இடத்திலிருந்து நைஸாக நழுவினார் வீ. பி. நானும் ''டாட்டா அடிக்கடி சந்திக்கிறேன்'' என்று சொல்லிவிட்டு புறப்பட்டேன்!

—நாரதர்.

## போதனு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கைக்குழுவை கேட்டுக்கொள்கிறது.

நீர்மானம்—3

புத்தூர் பஞ்சசிக பாடசாலையில் தமிழ்ப் பிள்ளைகளுக்கு கட்டாயமாக சிங்களம் போதனு மொழியாகவும் இந்து மதத்தவர்களான அந்தப் பிள்ளைகளுக்கு கட்டாய பௌத்த பாடமாகவும் திடீரெனத் திணிக்கப்பட்டதையும் அதனால் அப்பிள்ளைகளின் கல்வி சமய வாழ்வு பாதிக்கப்பட்டதையும் ஆராய்ந்து அரசினரின் இந்த நடவடிக்கை மக்களின் அடிப்படை உரிமைகளுக்கும் நாட்டின் சட்டத்திற்கும் மாறானது என்று இலங்கைத் தமிழரசுக் கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது.

அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளை சுற்றுடலில் உள்ள தமிழ் பாடசாலைகளில் சேர்ப்பதற்கு கல்வி அதிபர் தடைவிதித்த காரணத்தினுல் கல்வியை இழந்திருக்கும் அப்பிள்ளைகளுக்கு கல்வி கற்பதற்கு உடனடியாக ஓர் பாடசாலையை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கையை எடுக்குமாறு கோப்பாய் பா. உ. அவர்களிடம் செயற்குழு பணிக்கிறது.

இன்று புத்தூரில் ஆரம்பித்திருக்கும் இப்பிரச்சினை தமிழ்ப் பிள்ளைகள் அனைவரினதும் கல்வியை வருங்காலத்தில் பாதிக்கும் ஆகையால் இதையொட்டி தீவிர நடவடிக்கை எடுக்குமாறு தமிழர் நடவடிக்கைக்குழுவிடம் கேட்டுக்கொள்கிறது.

## தம்மைத்தாமே...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

கோஷ்டியில் இருப்பதாகவும், இன்னும் சிலர் சேர்ந்துழைக்கக்கூடிய வாய்ப்புண்டெனவும் இதனால் சில நிலவரங்கள் மாற்ற மடையக் கூடும் என்றும் சொன்னார்.

திரு. அந்தோனிப்பிள்ளை எம். எம். சி. உட்படப் பலர் பேசினர்.

## தமிழர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கடந்தகால நடவடிக்கைகள் தமிழ் மககளின குற்றச்சாட்டை ஊர்ஜிதம் செய்வதாகவேயிருந்து வருகின்றன.

இப்போது தொல்பொருள் ஆய்வுத்துறை எடுத்துள்ள ஒரு நடவடிக்கையும் இதையே ஊர்ஜிதம் செய்வதாக உள்ளது.

இலங்கையின் கடந்த 200 ஆண்டு வரலாற்றில் முக்கிய சம்பவங்களை நினைவுகூரும் முகமாக தொல்பொருளாய்வுக்குழுவினர் நினைவுத்தூண்களை ஆங்காங்கே நிறுவ தீர்மானித்துள்ளனர். இதற்காக ஒரு குழுவே நியமிக்கப்பட்டுளளது.

இக்குழுவில், கலாசார அமைச்சு செயலாளர் நிசங்கா விஜயரத்தின, முன்னாள் தொல்பொருள் ஆய்வு ஆணையாளர் பரணவிதாரணை, இப்போதைய தொல்பொருள ஆய்வுதுறை ஆணையாளா டாக்டா ஆர். எச். டீ சில்வா ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

இக்குழு நிறுவுவதற்கு தீர்மானித்துள்ள நினைவுத் தூண்களின் விபரம் 2.2.73 டெயிலி நியூஸ் ஏட்டில் வெளிவந்துளளது. அதன்படி இவர்கள் நிறுவ உள்ள நினைவுத் தூணகள் அனைத்தும் பௌத்த சிங்கள வரலாற்றுச் சம்பவங்களையொட்டியதாகவே உள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலோ, இலங்கையின் பிற இடங்களிலோ, தமிழர வரலாற்றைப் பிரதிபலிக்கும ஒரு நினைவுச சின்னம் கூட அதில் இடம் பெறவில்லை. அதே வேளையில் யாழ்ப்பாணத்தில் சங்கமித்தை பௌத்த மரத்தைப் பரப்பும் நோக்குடன் அரசமரக் கன்று கொண்டுவந்திறங்கிய இடம் என்று கருதப்படுகின்ற இடத்திலும் நினைவுத்தூண் நிறுவப்படப்போகிறது!

இந்த வரலாற்று இருட்டடிப்பை— தமிழருக்கு இழைக்கப்படும் மாபெரும் அநீதியை கண்டித்தெறியும் ...கள்.

## தமிழுணர்ச்சிக் கடித உறைகள்

எல்லாம் தமிழிற்செய்து எம் வாழ்வாம் தமிழைக்காக்கத் தூண்டும் தமிழ்உணர்ச்சி ஊட்டும் பாடல்கள் பொதிந்த கடித உறைகளைப் பெற விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி.

மா. க. கனகேந்திரன்
(ஈழவேந்தன்)
150, சுபத்திராராம வீதி
நுகேகொடை

## பொறியியல்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பல்கலைக் கழகத்தின் பல்வேறு துறைகளுக்கு மொழி அடிப்படையில் நடைபெற்ற தரப்படுத்தல் படிதான் இம்முறையும் மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று வந்துள்ள செய்திகளினால் தமிழ் மாணவர்களுக்கு இம்முறையும் பெரும் பாரபட்சம் காட்டப்பட்டிருக்கலாம் என்று அஞ்சுகிறோம் பொறியியல் துறைக்கு அனுமதிக்கப்பட்டுள்ள 275 பேரில் 32 பேரே தமிழ் மாணவர்கள் என்று வந்த செய்தியும் நமது அச்சத்தை இரட்டிப்பாக்கிறது.

'பாரபட்சமான கொள்கைகள் கடைப்பிடிக்கப்படும் மூன்றாவது ஆண்டு இது என்பதை எமது சங்கம் நினைவுபடுத்துவதுடன், உயர்தரக் கல்வியை முழுக்க முழுக்க திறமை அடிப்படையில் வழங்க தகுந்த நடவடிக்கையை ஆட்சியாளர் எடுத்தாக வேண்டும் என்றும் கோருகிறது.

பல்கலைக்கழக அனுமதி கோரிய மாணவர்களின் பெயர்களை அவர்கள் எடுத்துள்ள புள்ளிகளுடன் வெளியிடுமாறும் எமது சங்கம் கோருகிறது.'

ஆற்றல் ஆளுங்கட்சியில் ஒட்டியிருக்கும் குமாரசூரி... தமிழ் மக்கள் கேட்கிறார்கள்.

## சட்டக்கல்லூரி...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கட்கு மத்தியிலும் இத்தேர்தலில் அக்கறைகொண்டிருந்தார். ஆதரவுந் திரட்டியதாகக் கேள்வி. அமைச்சர் பெருமானின் அதிசிரத்தையால இவர்களிற் சிலர் தேர்தல்பால் அச்சமும் அசிரத்தையுங்காட்டினர்.

(4) ஆளுங் கட்சியின் தொண்டனை விநோதனின் விளைத விளையாடடுக்களால் (நியமனம், இடமாற்றம், பதவி உயர்வு, இத்யாதி மாயஜாலங்கள்) தாமாகவோ அன்றித் தமது சகோதர சகோதரிகள், மாமன், மைச்சால் என்போருக்கு உதவி பெற்றோர் சிலரும் 'செஞ்சோற்றுக் கடனை கழித்திருந்தனர்.

இத்தனை தில்லு முல்லுக்களின் பின்பும் தேர்தல் முடிவில் வாக்குகள் எண்ணப்பட்டபோது கனக மனோகரன் பெற்ற வாக்குகள் 72 அத்தனையும் அசல் தமிழ் வாக்குகள். வெற்றிபெற்ற விநோதன் பெற்றவாக்குகள் 89 இதில் சிங்கள வாக்குகளைக் கழித்துவிட்டுப்பார்த்தால் விநோதனின் வெற்றியின் இலட்சணம் தெரியும.

சட்டக் கல்லூரி தமிழ் மன்றத்தின் கலைவிழா அதன் தலைவராக விநோதன் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கலாம். ஆனால் சட்டக் கல்லூரித் தமிழ் மாணவர்களால் ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் யார்?

'தமிழ் மாணவர் மன்றத் தலைவர்' பத்திரிகையிற் பகிரங்கப்படுத்தவும் தமிழ் மாணவர் மன்றத் தலைவர் என்ற ரீதியில் அண்ணு விழாவிற்குத் தலைமை தாங்கவும் யார் இந்த விநோதன்?

(நமது நிருபர்)

## கிளிநொச்சியில் அண்ணு விழா

11—2—73 மாலை கிளிநொச்சி சந்தை மைதானத்தில் ச. க. முருகேசு தலைமையில் நடைபெறும் அண்ணு நினைவாஞ்சலிக் கூட்டத்தில் வி. ஆனந்தசங்கரி பா. உ. அடலேறு ஆலாலசுந்தரம், நாவலர் அ. அமிர்தலிங்கம், திருமதி. அமிர்தலிங்கம், வி. என். நவரத்தினம், பா. உ. தர்மலிங்கம் பா. உ. முத்துசிவன், க. போராயிரசிங்கம் கா. செல்லையா உட்பட பலர் உரையாற்றுவர்.

**காசி ஆனந்தன் வண்ணை ஆனந்தன் சிறையில் இன்று 254-வது நாள்**


**திருக்குறள் தெளிவுரை**

"மேழிச் செல்வம் கோழை படாது"

திருக்குறள்.

200 மில்க்வைற் நீலசோப் மேலுறைகளை அனுப்பி டாக்டர் மு. வரதராசனார் உரையுடன் கூடிய திருக்குறள் தெளிவுரை என்ற புத்தகத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்

**மில்க் வைற் சோப் தொழிற்சாலை**
**த. பெ. இல. — 77, யாழ்ப்பாணம்.**


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தம்மைத் தாமே ஆளுவதற்கு தமிழினம் தயாராக வேண்டும்!

## கோப்பாய் பா. உ. கதிரவேற்பிள்ளை பேச்சு!



இலங்கையின் அரசியல் பொருளாதார நெருக்கடி தலைதூக்கிவிட்டது. சிங்கள மக்களால் ஏற்படக்கூடிய இந்தப் புரட்சிபற்றிய தகவல்களைப்பரப்பிவிடக் கூடாது என்பதற்காகவே அரசாங்கம் அவசரப்பட்டு பத்திரிகை மசோதாவைக் கொண்டுவரப் பார்க்கிறது. கொள்ளையும், லஞ்சமும், ஊழலும் நாட்டில் மிகுந்துவிட்டதால் ஆட்சி இயங்காத அவலநிலை ஏறக்குறைய ஏற்பட்டுள்ளதென்றே சொல்லவேண்டும். இத்தகைய அரசியல் சூழ்நிலையில் தமிழ் மக்கள் தம்மைத் தாமே நிர்வகிக்கக் கூடிய பொறுப்பை ஏற்கத் தயாராக இருக்கவேண்டும்."

இவ்வாறு திரு. சி. கதிரவேற்பிள்ளை பா. உ. யாழ்ப்பாணம் நாவலர் வீதி 202ம் இலக்கக் கட்டிடத்தில் நடைபெற்ற தமிழர் கூட்டணியின் 17ம் வட்டாரக் கிளை அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பேசும்போது தெரிவித்தார்.

நகரிலுள்ள சகல வட்டாரங்களிலும் கிளைகளை அமைப்பது என்ற கூட்டணியின் முடிவுக்கமைய முதலாவதாக இக்கிளை அமைக்கப்பட்டது.

கூட்டத்துக்கு வழக்கறிஞர் தா. சங்கரப்பிள்ளை தலைமை வகித்தார். கதிரவேற்பிள்ளைமேலும் கூறியதாவது:-

தமிழர் கூட்டணி, வட்டாரங்கள் தோறும் கிளைகளை அமைப்பது எதிர்வரும் தேர்தலை முன்வைத்தல்ல என்பதை யாவரும் உணரவேண்டும். கூட்டணியை சகல இடங்களிலும் பலப்படுத்த வேண்டும். தேர்தல் வரும் போதும் அதில் கவனம் செலுத்தலாம்.

நாடு முழுவதும் தமிழ் மக்கள் கூட்டணிக்கு ஆதரவு தரும்போது, உள்ளூராட்சி மன்றங்களில் கூட்டணி பலம்பெற்று விளங்காமற் போவதேன்? யாழ். மாநகராட்சி மன்றத்தின் கடந்த உதவி மேயர் தேர்தலில் கூட்டணி தன் பலம் வாய்ந்த எதிர்ப்பைக் காட்டியது குறிப்பிடத் தக்கது. இந்த நிலையை வளர்க்கவேண்டும். வட்டார ரீதியாக நிறுவப்படும் கூட்டணிக் கிளைகளை தமிழ்ப் பிரதேசம் முழுவதும் பரப்பவேண்டும்.

அரசாங்கத்துக்கு ஏற்படக்கூடிய நெருக்கடியால் வாழ்க்கையில் கஷ்டம் வரப்போகிறது. உணவு இறக்குமதிக்கே இண்டாட்டமான நிலை ஏற்பட்டு வருகிறது. இயந்திர மயம் அதிகரித்து விட்டதே வாழ்க்கைப் பிரச்சினை அதிகரிப்பதற்கு ஒரு காரணமாகும். மீண்டும் கால்நடைகளைப் பயன்படுத்த வேண்டிவரும். ஆனால் கால்நடைகள் அழிந்து வருகின்றன.

பலவித நெருக்கடிகளாலும் நாட்டில் குழப்பம் ஏற்படலாம். இராணுவ அடக்குமுறையால் இதனை மூடி மறைக்கப் பார்க்கிறார்கள். நவீன ஆயுதங்களை வெல்வாம் இறக்கி வைத்திருக்கின்றனர். நெருக்கடி நிலை பற்றிய தகவல் பரப்பாமல் தடுக்கவே பத்திரிகை மசோதாவைக் கொண்டுவர அவசரப்படுகின்றனர் புரட்சி, கிளர்ச்சி முதலானவை பற்றிய கருத்துக்கள் சிறிதேனும் பரப்பாமல் தடுக்கவே பத்திரிகையின் ஏகபோக உரிமைக்கு வாய்ப் பூட்டுப் போடப் பார்க்கிறார்கள். குறிப்பிட்ட ஒருசில பத்திரிகை ஸ்தாபனங்களைக் கட்டுப்படுத்தவே பத்திரிகை மசோதா கொண்டுவரப்படுகிறது எனச் சொல்வது பொய்ப் பிரசாரமாகும்.

மிகவும் ஊழல் நிறைந்த நிர்வாகத்தை இன்றைய அரசாங்கம் உருவாக்கியுள்ளது. நாட்டில் கொள்ளையும் ஒழுங்கீனமும் மிகுந்துவிட்டன.

திரு. ஜி. பி. வின்சன்ற் பேசும்போது, 'தமிழர் கூட்டணி மக்கள் இயக்கமாக மேலும் பலம்பெற வேண்டுமெனவும், பாமர மக்களை இயக்கத்தில் நெருங்கிய தொடர்பு கொள்ளச் செய்ய வேண்டுமெனவும்' தெரிவித்தார்.

திரு. ரி. கே. இராசரத்தினம் எம். எம். சி. பேசும்போது, 'யாழ். மாநகராட்சி மன்றத்தில் பத்து எம். எம். சி. க்கள் எதிர்க்

(7-ம் பக்கம் பார்க்க)

# வேம்படி மகளிர் கல்லூரியினர் தமிழர் பண்பாடு காத்தனர்!

## ஏனைய கல்லூரிகளும் இதைப் பின்பற்ற வேண்டும்!

வேம்படி மகளிர் கல்லூரி தனது வருடாந்த இரவு விருந்தின்போது ஒரு பண்பாட்டுப் புரட்சியையே ஆரம்பித்து வைத்தது. எமது பெருங் கல்லூரிகள் 18ம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் நிலவியதுப, 19ம் நூற்றாண்டில் இங்கு சருவிக்கப்பட்டதுமான காலனி ஆதிக்க காலப் பாரம்பரியங்களையே இன்றும் கைக்கொண்டு தமது கல்லூரி விருந்துகள், விழாக்கள் வைபவங்களை மாணவர் போதனா மொழிக்குப் புறம்பான விதேசி மொழியில் நடத்திவருகின்றன என்ற வசையை அகற்றும் வகையில் கடந்த 24 1.73ம் திகதி நடைபெற்ற தமது இரவு விருந்தில் பந்திக்குப் பின் நிகழ்த்தப்பட்ட உரைகள் யாவற்றையும் போதனா மொழியில் தானே நிகழ்த்தி கல்லூரிகளின் வரலாற்றில் ஒரு பாரம்பரியப் புரட்சியை வேம்படி மகளிர் கல்லூரி ஆரம்பித்து வைத்துள்ளது.

வேம்படி மகளிர் கல்லூரி உயர்வகுப்பு மாணவர் மன்றத்தினுல் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ள மேற்படி பண்பாட்டுப்புரட்சியின் தாக்கம் ஏனைய பிற கல்லூரிகளிலும் எதிரொலிக்க செய்யுமென மாணவர்கள் திடமாக நம்புகின்றனர். கல்லூரி விழாக்கள், வைபவங்கள் மட்டுமல்லாது கல்லூரி மலர்களிலும் இனிமேல் மாற்றம் ஏற்படலாமென்றும், மலர்களின் முகப்பு அட்டைகளை அலங்கரிக்கும் எழுத்துக்கள், ஆசிரியர் எண்ணம், அதிபர் அறிக்கை, ஒளிப்படங்களுக்கான அடிக் குறிப்புக்கள் யாவும் இனிமேல் போதனா மொழியிலேயே இடம் பெறலாமென்றும், போதனா மொழியைக் கல்லூரி மலர்களில் பின்னுக்குத் தள்ளும் மனப்பாங்கும் அடியோடு மாறிவிடுமென்றும் சொல்லப்படுகிறது.

சமீபகாலமாக, பெரும கல்லூரிகள் மத்தியில் இடம் பெறும் மட்டைப் பந்தாட்டப் பெரும்போட்டி ஒலி பெருக்கி வர்ணனைகள் போதனா மொழியில் இடம் பெறுவது தெரிந்ததே! இனி வரும் போட்டிகளில் உத்தியோகத்தர் அட்டைகள், சிறப்பு மலர்கள் யாவும் போதனா மொழிக்கு மாற வேண்டுமென்பதோடு, தத் தமது பக்க ஆட்ட வீரர்களை உற்சாகப்படுத்த உபயோகிக்கும் சுலோகங்களையும் போதனா மொழியிலேயே கூறிக்கொள்வதென்பதில் வடபகுதி மாணவர்கள் தீவிரமாக இருக்கிறார்கள்.

தமது விருந்தை இவ்வாண்டில் தமிழ் முறைப்படி நடத்துவதன் மூலம் பழைய பாரம்பரியங்களைத் தவிடு பொடியாக்கும் புரட்சிக்கு வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகள் முற்பட்டபோது உடனிருந்தே கொல்லும் வியாதி போல் அங்கொன்று இங்கொன்றாக எதிர்ப்புக்களும் எழாமல்இல்லை குறிப்பாக கூட்டரசாங்கக் கட்சி ஆதரவாளர்களாகத் தம்மைக் காட்டிக்கொள்ளும் சில புல்லுருவிகளே இந்தக் கைங்கரியத்தில் ஈடுபட்டிருந்தனர். ஆயினும் விஜேதவின் மருமகளின் கூட்டத்தினரின் தகிடுதத்தங்கள் வேம்படி மகளிர் கல்லூரியில் எடுபடவில்லை. விருந்தில் பந்திக்குப் பிந்திய உரைகள் வழமைபோல் இவ்வாண்டும் ஆங்கிலத்திலேயே நடைபெறவேண்டுமென அவர்கள் தூண்டுதலால் அதிபருக்கு ஒருசில கடிதங்கள் அனுப்பப்பட்டதாம். ஆயினும், அவை குப்பைக் கூடையில் உரிய இடத்தைப் பெற, மாணவர்களது தன்மான உணர்வுக்குக் கல்லூரி விருந்தில் வெற்றி பிறந்தது.

வட. மாவட்ட அரசாங்க அதிபரான ஒரு சிங்களப் பெருமகனே தமிழில் உரை நிகழ்த்தும் அளவுக்கு வேம்படி மகளிர் கல்லூரியினரின் தாய்மொழிப் பற்று தூண்டுகோலாக இருந்தது குறித்து ஏனைய பிற கல்லூரி மாணவிகளும் பெருமையடையலாம். யாழ் மத்திய கல்லூரி இனிமேலாகுதல் இப்படிப்பட்ட விருந்துகளுக்குத் தனது பிரதிநிதியாக போதனா மொழியில் தேர்ச்சியுள்ள மாணவர்களையே அனுப்ப வேண்டும். மணிப்பிரவாள நடையில் தமிழ் பாதி ஆங்கிலம் பாதியாக தமது பேச்சை விருந்தினர் மத்தியில், சிரிப்புக்கு இடமாக்கிய வேம்படி மகளிர் கல்லூரி உயர் மாணவ மன்றத் தலைவி செல்வி.ஜெயார்திவாமயிசவாவும் சட்டக் கல்லூரியில் அடியெடுத்து வைக்குமுன் தமது தமிழ் அறிவை விருத்தி செய்துகொள்வது விரும்பத்தக்கது. தமிழர் கூடியிருக்கும் அவையில் தமிழில் பேசத் தெரியாது என்று பெருமை பேசிய காலம் மலையேறி விட்டதென்பதை, கிரிகாந்தாவும், ஜயந்தியும் இனியாவது தெரிந்துகொண்டு பயனடைவார்களாக!

—வதனி.

# தமிழினத்தின் தீர்ப்பை அறிய இடைத் தேர்தலை உடன் நடத்துக!

## பிரதமருக்கு இளைஞர்மன்றம் கடிதம்!

புதிய அரசியல் சட்டம் பற்றி தமிழ் மக்களின் கருத்தையறிவதற்கு காங்கேசன்துறை இடைத்தேர்தலை உடனடியாக நடத்தும்படி கோரி ஊரதீவு இளந்தமிழர் மன்றத்தலைவரும் சட்டமாணவருமான திரு. எஸ். கே. மகேந்திரன் பிரதமருக்கு ஓர் கடிதத்தை அனுப்பியுள்ளார்.

அக்கடிதத்தில் அவர் கூறியிருப்பதாவது:-

ஈழம் வாழ் தமிழினத்தின் வேண்டுகோளையும் அபிலாசைகளையும் நிராகரித்து இலங்கை குடியரசாக்கப்பட்டதை எதிர்க்குமுகமாக காங்கேசன்துறைக்குரிய தேசிய பேரவை உறுப்பினர் பதவியை தமிழர் கூட்டணித்தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்கள் துறந்தார்கள், என்பதை தாங்கள் அறிவீர்கள்.

காங்கேசன்துறைத்தொகுதிக்குரிய இடைத்தேர்தலில் போட்டியிடுவதன் மூலம் தமிழினத்தின் ஏகோபித்த எதிர்ப்பை தங்கள் அரசுக்கும் உலகிற்கும் உணர்த்த வேண்டியே திரு. செல்வநாயகம் தனது பதவியைத் துறந்தார் என்பதை தாங்கள் உணர்வீர்கள் என்று நம்புகிறேன்.

தமிழ்ப் பகுதியிலுள்ள தங்கள் ஆதரவாளர்கள் இலங்கை குடியரசாக்கப்பட்டதை தமிழ் மக்கள் ஆதரிக்கிறார்கள் என்று சொல்லிவரும் இன்றைய நிலையில் தமிழ் மக்களின் உண்மை நிலையை தாங்கள் அறிய முயலவேண்டும். அங்ஙனம் அறிவதற்குள்ள ஒரே ஒரு வழி காங்கேசன்துறை இடைத்தேர்தலை நடத்தி அதன் முடிவை அறிவதே.

தமது இதயக் குமுறலை தமது உரிமைகள் பறிக்கப்படுவது கண்டு குமுறி எழும் தமது உணர்ச்சிகளை அனைத்துலகுக்கும் தங்கள் அரசுக்கும் தமிழினத்தின் சார்பில் எடுத்துக்காட்ட காங்கேசன்துறைத்தொகுதி மக்கள் தவியாய்த் தவிக்கின்றார்கள்.

ஆனால் நீங்களோ வட பகுதியில் ஒருசிலர் செய்யும் வன்முறைகளைச் சாட்டாக வைத்து தேர்தலை நடத்தாமல் இருப்பது மிகவும் வேதனைக்குரியது.

அகிம்சையே தமதுகொள்கை என தமிழர் கூட்டணியினர் திட்டவட்டமாக அறிவித்துவிட்ட பின்பும் வன்செயல்களுக்கும் அவர்களுக்கும் முடிச்சுப் போடுவது மிகவும் வேதனைக்குரியது. வன்செயல்களை அடக்குமாறு உங்களை வேண்டும் அதேநேரத்தில், காங்கேசன்துறை இடைத்தேர்தலை நடத்தி தமிழினத்தின் ஏகோபித்த முடிவையறிந்து ஈழத்தமிழினத்தின் உரிமைகளை மதித்து வழங்குமாறு வேண்டுகிறேன். அகிம்சையில் நம்பிக்கைகொண்ட தமிழ் மக்களில் ஒருவன் என்ற வகையில் யான் விடுக்கும் இவ்வேண்டுகோளை தாங்கள் ஏற்றுக்கொள்வீர்கள் என நம்புகிறேன்.

# அளவெட்டி—மல்லாகம் ப. நோ. கூ. சங்க தேர்தலில் அரசாங்க ஆதரவாளர்கள் படுதோல்வி! தமிழர் கூட்டணியினர் பெருவெற்றி!!

## வி. பொன்னம்பலம் பதவி விலகுவாரா?

அளவெட்டி மல்லாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப்பொதுச்சபையின் விசேட பொதுக் கூட்டம் ஒன்று புதிய இயக்குனர் சபையைத் தெரிவு செய்யும் பொருட்டு 28-1-1973 ஞாயிற்றுக்கிழமை கூடியது.

மேற்படி கூட்டம் சபைத்தலைவர் திரு. வி. பொன்னம்பலம் தலைமையில் கூடியது. பொதுச்சபை உறுப்பினர்களில் எழுபத்தியொரு பேர் கலந்து கொண்டனர்.

தமிழர் கூட்டு முன்னணி சார்பில் ஐவரும் அரசாங்க சார்பில் ஒருவரும் போட்டியிட்டனர் அரசாங்கசார்பில் போட்டியிட்டவர் தோல்வி அடைந்தார். தமிழர் கூட்டு முன்னணி சார்பில் போட்டியிட்டவர் ஐவரும் வென்றனர். திரு. வி. பொன்னம்பலம் அளவெட்டி மல்லாகம் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுச்சபையின் ஆதரவை முற்றாக இழந்ததால் அவர் தனது இராஜினாமாக் கடிதத்தை ... சமர்ப்பிப்பார் என மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியாவைப் புறக்கணிக்கிறது இ. போ. ச!

## 'பஸ் டிப்போ' விடயத்தில் ஏனிந்தப் பாரபட்சம்?

இலங்கையின் எல்லாப் பாகங்களுக்கும் குறிப்பாக வடக்கு கிழக்கு பகுதிகளுக்கும் மத்திய இடமாக விளங்குவது வவுனியா. இங்கு ஒரு பஸ் டிப்போ ஆரம்பித்து நல்லமுறையில் சேவை செய்வதாயின் இலங்கை முழுவதற்குமே இங்கிருந்து பஸ் சேவை நடாத்த முடியும்.

யாழ்ப்பாணம், மன்னார் திருகோணமலை, மட்டக்களப்பு, கொழும்பு, கண்டி போன்ற தூர இடங்களுக்கு இங்கிருந்து பஸ் சேவை நடைபெறுமாயின் பிரயாணிகள் அதிகம் நன்மையடைவார்கள். தூர இடங்களுக்குச் செல்லும் பஸ்களில் யாழ்ப்பாணத்தில் வைத்தே பிரயாணிகள் நிரப்பிவிடுகின்றனர். இதனல் கிளிநொச்சி மாங்குளம், வவுனியா போன்ற இடங்களிலிருக்கும் பிரயாணிகள் பஸ் பிரயாணத்தை நினைத்துப் பார்க்கவே முடிவதில்லை. உதாரணமாக யாழ்ப்பாணம் — மன்னார் சேவையில் யாழ்ப்பாணத்தில் வைத்தே மன்னார் பிரயாணிகள் மட்டும் நிரம்பி விடுகின்றனர். ஆகவே, மாங்குளம், வவுனியா, முருங்கன் போன்ற இடங்களுக்குச் செல்லும் பிரயாணிகள் இடமின்மையால் அவதிப்படுகின்றனர். இவ்வாறே ஒவ்வொரு தூர இடத்துச் சேவைகளும் நடைபெறுகின்றன.

இக்குறைகள் போக்கப்படவேண்டுமானல் வவுனியாவில் ஒரு பஸ் டிப்போ இயங்கி இங்கிருந்து, எல்லாப் பகுதிக்கும் பஸ் சேவை நடைபெறவேண்டும். இன்னுமொ சொல்லப்போனல் இலங்கையிலேயே வவுனியாப் பகுதியிலேதான் குடியேற்றத் திட்டங்களுக்கு பஸ் சேவை செய்து கொடுக்கப்படவில்லை. குடியேற்றத் திட்டங்கள் ஆரம்பித்த போது அரசாங்கம் கிராம மக்களிடம் சென்று ''குடியேற்றத் திட்டங்களிலே வந்து குடியேறுங்கள் உங்களுக்கு வைத்திய வசதி செய்து தருகிறோம். பாடசாலை வசதி செய்து தருகிறோம். போக்குவரத்து சுகாதார வசதி செய்துதருகிறோம் என்று ஆசைவார்த்தை நடத்தியது. இன்று என்ன நடந்தது? பாவம் குடியேற்றவாசி ஏழைகள்.

போக்குவரத்து வசதியினங்களைப் போக்கவென்றே கடந்த அரசாங்கம் வவுனியாவில் 3½ இலட்ச ரூபா செலவில் ஒரு பஸ் டிப்போவை ஆரம்பிக்க நிதி ஒதுக்கீடு செய்தது. இதற்கென கண்டி வீதியில் காணியும் பெற்று கட்டடத்திற்கான அத்திவார கல்போட்டு முடிந்துவிட்டது. இந்த நிலையில்தான் மக்கள் அரசாங்கம், தமிழர்களைப் புறக்கணிக்காத அரசாங்கம், தமிழ்ப் பகுதிகளைப் புறக்கணிக்காத அரசாங்கம் பதவிக்கு வந்தது. கடந்த மூன்று ஆண்டுகளாக நடைபெற்றது என்ன? ஒரு கல்லுத்தானும் கட்டடத்தில் உயரவில்லை. இது ஏன்? இது தமிழ்ப்பகுதி என்பதாலா? தமிழரசுக் கட்சி பா. உ.க்களின் தொகுதி என்பதாலா? தமிழர்கள் பஸ்சிற்குக் கொடுக்கும் பணம்— இல்லையா?

தமிழர்களுக்குச் சம அந்தஸ்து கொடுக்கவேண்டுமென்று வாதாடிய சமசமாச அமைச்சர், சமசமாசக் கட்சியின் முக்கியஸ்தர் அனில் முனசிங்காவைத் தலைவராகக்கொண்ட இ. போ. ச.விலா இந்த பிரதேச ஒதுக்கல்? தமிழ்ப்பகுதி புறக்கணிக்கப்படவில்லை. என்று வாய்கிழியக் கத்தும் தமிழ் மந்திரி இதற்குஎன்ன சொல்லுவார்? ஆசிரியர் இடமாற்றம், அரசாங்க ஊழியர் இடமாற்றம் என்றால் செல்லையா குமாரசூரியரிடம் ஓடிச் செல்லும், வவுனியாவின் பொதுவுடமைக் குஞ்சுகள் இதற்கு என்ன சொல்லுவார்கள்? இவர்களுக்கு இது கண்ணிற்படவில்லையா?

காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்திக்கு என முன்னைய அரசாங்கம் அனுப்பிவைத்த இயந்திரங்களைக் கொழும்பிற்கு திருப்பிக் கொண்டுவர நிதி ஒதுக்கீடு செய்த இந்த அரசாங்கம் இந்த டிப்போ கட்டக் கொண்டுவந்த கல்லையும் கொழும்பிற்கு ஏற்ற நிதி ஒதுக்கியுள்ளதா என்று வவுனியா மக்கள் கேட்கின்றனர்.

வவுனியாவில் காணிக் கச்சேரி என்றால், நகரசபை கடை, விநியோகம் என்றால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இயக்குனர் நியமிப்பது என்றால் சிகப்பு வர்ணம் பூசிய கடிதங்களுடன் நாம் அரசாங்கக் கட்சியினர் எமக்கு முதல் இடம் என்று முன்னுக்குப் போகும் செஞ்சட்டை வீரர்கள் பஸ் டிப்போ விடயத்தில் பேசாதிருப்பதேனோ? இங்கும் ஒரு இயக்குனர் சபை நியமிப்பதானல் இவர்கள் முன்னுக்கு வருவார்கள் இதற்குப் பெயர்தான் சோசலிச ஆட்சி?

(வவுனியா நிருபர்)

## 11-2-73 நினைவு தினம்

### 'மலையகத்துக் காந்தி' அமரர் இராஜலிங்கம்



மனிதன் பிறக்கிறான், இறக்கிறான் ஆனல் ஆயிரத்தில் ஒருவன்தான் பலராலும் போற்றப்படும் நிலையை அடைகின்றான். இவ்வகையில் தலைவர் கே. ராஜலிங்கம் மலையக மக்களின் மதிப்பிற்கு உரியவர். சாதாரண தோட்ட பெரிய கங்காணி குடும்பத்தில் பிறந்து, வளர்ந்து பின் தோட்டப் பாடசாலை ஆசிரியராக வாழ்க்கையை ஆரம்பித்து பொதுநல வாதியாகவும், தொழிற்சங்க அரசியல் வாதியாகவும் பிரபலமடைந்தார்.

மலையகத்தில் தொழிற்சங்க இயக்கம் ஆரம்பிக்கப்படும் முன்பே தோட்டங்கள் தோறும் சென்று சீர்திருத்தக் கருத்துக்களை பரப்புவதிலும் தீண்டாமை ஒழிப்பிலும் தீவிரமாக ஈடுபட்டார். 1939ம் ஆண்டு மறைந்த பாரத பிரதமர் நேரு அவர்களால் இலங்கை வாழ் இந்தியர் நலனுக்காக ஆரம்பித்து வைக்கப்பட்ட இலங்கை — இந்திய காங்கிரஸின் ஆரம்ப சிற்பிகளில்

### மலையகத்திலே........

ஒருவராக இருந்து தொழிற்சங்க பணியில் முழு நேர ஊழியனக செயலாற்றினர். பின்னர் இதில் ஏற்பட்ட பிளவிற்கு பின் இ. தொ. காவில் தலைவர் தொண்டமானின் வலது கரமாக இருந்து இறுதிவரை பணியாற்றினர். இன்று இ. தொ. கா. ஈழத்திலும், தென்கிழக்காசியாவிலும் பெரிய தொழிற்சங்கமாக திகழ்கிறது என்றால் அந்த பெருமை, தலைவர் ராஜலிங்கத்தையே சாரும். இதை எவரும் மறுப்பதற்கு இல்லை. இன்று புகழ்மிக்க தொழிற்சங்க பிரமுகர்களாக திகழும் பலர் இவருடைய சீடர்கள் ஆவர். இவர்களில் ஆண்மையில் புகழோடு மறைந்த தொழிலாளர் தேசிய சங்க தலைவர் திரு. வி. கே. வெள்ளையன் அவர்களை மூத்த சீடராக குறிப்பிடலாம்.

1947ம் ஆண்டு நடைபெற்ற முதலாவது பொது தேர்தலில் நாவலப்பிட்டி தொகுதியில் இ. இ. காங்கிரஸ் அபேட்சகராக போட்டியிட்டு பெரும்பான்மை வாக்குகளால் நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டார். இந்நேரத்தில் இந்தியருக்கு எதிரான பலவித சட்டங்கள் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டன, குறிப்பா பிரஜா உரிமை சட்டதனை குறிப்பிடலாம். இந்நேரத்தில் இவற்றை எதிர்த்து போராடும் பொறுப்பு இவருக்கு ஏற்பட்டது. இவற்றை மிகவும் சாதுரியமாக சமாளிக்க இவர்பட்ட இன்னல்களை பலரும் நன்கு அறிவர். இவர் ஒருபோதும் ஒருசில தொழிற்சங்க வாதிகளைப் போல் சொத்து சுகம் தேடுவதிலோ, சுய தேவைகளை பூர்த்தி செய்வதிலோ தனது நேரத்தை செலவிடவில்லை. தனது பேச்சு, மூச்சு, செயல் மூன்றையும் தொழிற்சங்க பணியிலே செலவிட்டு தொழிலாளர் உயர்வே தனது உயர்வாக கருதினர். இதனல் இவரை மலையக மக்கள் 'மலைநாட்டு சாந்தி' என அன்பாக அழைத்தனர்.

தலைவர் ராஜலிங்கத்தின் ஞாபகமாக ஒரு சிலையோ, நினைவு மண்டபமோ இல்லாதது இன்று பெருங்குறையாகும். தனது உடல், பொருள், ஆவி அனைத்தையும் குறிப்பாக மலையக மக்களுக்காகவும் பொதுவாக ஈழம் வாழ் தமிழருக்காகவும் அர்ப்பணித்தார். அத்துடன் காந்திய வழியில் கதர் அணிந்தது, பிரமச்சாரியாக வாழ்ந்து மறைந்தார். இவரின் நினைவாக ஒரு சிறப்பான நினைவு சின்னம் நிறுவும் பணியில் பலரும் ஈடுபட்டராயினும் பொதுமக்களின் ஆதரவின்மையும், பொருளாதார சிக்கலும் அவர்களின் பணியை தொடரமுடியாமல் ஆக்கிவிட்டமை கவலைக்குரியதாகும். நாம் அவருக்கு ஒரு நினைவு சின்னம் எழுப்பத் தவறினலும் பரவாயில்லை, வருடந்தோறும் அவரை மறவாமல் பொதுவாக நாடு முழுவதிலும், குறிப்பாக மலையகமெங்கும் நினைவு தின கூட்டங்களை ஒழுங்கு செய்வது அவசியமாகும். நன்றி மறவாமல் நமது மக்கள் இதை சரி செய்வார்களா?

—எஸ். ரமணி,
நாவலப்பிட்டி.

## ஈழத் தமிழினமும் பேரறிஞர்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

### தமிழகத்தின் சமீப நிகழ்ச்சிகள்

—அண்ணவைப் பலரும் கூத்தாடியென்று சொன்னர்கள். மக்கள் மத்தியிலே நடைபெறுகின்ற பலவிதமான கூத்துக்களையும் அகற்றுவதற்காக வேண்டி அண்ணு மேடையேறிக் கூத்து ஆடினரேயன்றி கூத்தாடிகள் இயக்கமாக திராவிட முன்னேற்றக்கழகத்தை அவர் வார்த்தெடுக்கவில்லை. அப்படி அவர் இயக்கத்தை வார்த்திருந்தால் சமீபத்திலேற்பட்ட நெருக்கடியின் போது தி. மு. க. வின் கதை வேறு விதமாக அமைந்திருக்கலாம். தமிழகத்து மககளை ஒரு விழிப்புணர்ச்சியுள்ள அரசியல் தொண்டர்களாக வளர்த்தெடுத்த காரணத்தினல்தான், இன்றுவரையில் அவர் வளர்த்த கழகம் யாராலும் அசைக்க முடியாதிருப்பதை நன்குணரக் கூடியதாயிருக்கின்றது. அண்ணவை ஒரு அறிஞர் என்று ஒப்புக்கொள்ள அவர் தி மு. க.வை உருவாக்கிய விதமொன்றே போதுமானது. அண்ணவின் மீது யார் அதிகம் பற்றுவைத்திருக்கின்றார்களென் பதைவிட, அண்ண காட்டிய கடமை கண்ணியம் கட்டுப்பாட்டை யாரின்று அனுசரித்து நடக்கின்றார்களென்பதைத்தான் தமிழினம் சிந்தித்துப்பார்க்கவேண்டும்.

இற்றைக்கு பல வருடகாலமாக ஒரு குடும்பம் போல கட்டிக்காத்து மற்றைய நாட்டவரெல்லாம் பெருமைப்படத்தக்கவொரு விதத்திலே இயக்கம் உருவாக்கித் தந்துவிட்டுப் பிரிந்து விட்ட அண்ணவின் கல்லறையே கண்ணீர் வடிக்கத்தக்க வகையிலே இன்று அவரது குடும்பத்திற்குள் சச்சரவு ஏற்பட்டதைக் கண்டு உலகத் தமிழ் பேசுமினம் அழுகின்றது. பிரிந்து சென்றவர்கள் மீண்டும் ஒருங்கு சேரமாட்டார்களாவென்றுதான் அங்கலாய்க்கின்றது.

அண்ணு இன்றிருந்தால்... இப்படியெல்லாம் நடந்திருக்குமாவென்று தான் இன்றுஉலகத்தமிழர் கேட்கின்றர்கள். அவரதுஎதையும் தாங்கும் இதயம் வேண்டும்' 'மறப்போம் மன்னிப்போம்' நடந்தவை நடந்ததாக இருக்க இனி நடப்பவை நல்லதாக இருக்கட்டும்' என்ற பொன் மொழிகளையெல்லாம் இவ்வளவு விரைவில் மறந்து விடுவார்களென்று யார்தான் நம்பினர்கள். இன்று ஆளை ஆள் முட்டிமோதுகின்றர்களேயென்றுதான் இதயம் அழுகின்றது. அண்ணு மறைந்த இந்த நான்காண்டில் இதனைத்தான் தமிழினம் கேட்கின்றது. நடந்ததை மறந்துவிட்டு அண்ணவின் வழியில் ஒரே அணியில் நின்று அவரது இலட்சியத்தை அடைய உழைப்போம். அப்பொழுது தான் அவரது ஆத்மா சாந்தி அடையும்.

## தமிழாராய்ச்சி...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

இரத்தினம்... போன்ற தலைவர்களின் பேச்சுக்கள் ஒலிக்காத மாநாடு, தந்தை செல்வா, மாண்புமிகு கலைஞர் கருணநிதி இன்னும் அவர் தமிழ் நாட்டுப்பெரும் பேச்சாளர்களின் பேச்சுக்கள் ஒலிக்காத மாநாடு தமிழ் ஆராய்ச்சி மாநாடாக இருக்கமாட்டாது! மாருக, டமிழ் ஆராச்சிகே! மகா நாடாகத்தான் இருக்கும்! மாநாடு பார்க்க தமிழ்ச் சமுதாயம் திரண்டு வராது. மாருக, தமிழ் எட்டப்பர் கூட்டமும், சிங்கள 'ஞானி' களும்தான் வருவார்கள்.

பாரிசில் தமிழ் ஆராய்ச்சி நடத்தி வெற்றிகண்ட தனிநாயக அடிகள் நாயகம் அவர்களே! தலைவராகிய நீங்கள் சற்றுச் சிந்தித்துப் பாருங்கள்! மாற்றாரின் சூழ்ச்சி வலையில் தவறி வீழ்ந்து விடாதீர்கள்! வீணுக தமிழர்களின் வெறுப்பை தேடிக்கொள்ள இடம் வைக்காதீர்கள்! கிறிஸ்துவராயிருந்தும், தமிழின் பெருமையை, தமிழ் மக்களின் பண்புகளையும் நன்குணர்ந்த நீங்கள் செய்யும் ஒவ்வொரு காரியமும் தமிழினத்துக்காக, தமிழ் மொழிக்காக வென்றே இருக்கட்டும்! வாழ்க உங்கள் தொண்டு!

வாழ்க தமிழ்! வெல்க தமிழினம்.

—அக்கரை சக்தி.
அக்கரைப்பற்று.

## தமிழரசுத் தொண்டர் மறைவு

வட்டுக்கோட்டைத் தொகுதியைச்சேர்ந்த முருகேசு சின்னத்தம்பி (செட்டியார்) 14-11-72 திகதியில் சிவபதமடைந்து விட்டார். இவர் அராலியில் தமிழரசு இயக்கம் வேகமாக வளர்ந்து ஒலித்திருப்பதற்கு உழைத்த ஆரம்பகாலத்தொண்டராவர். இவர் ஈழத்து நாவலர், தளபதி அமிர்தலிங்கத்தின் உற்ற துணைவன்

இவர் திருமலை யாத்திரை யாழ்ப்பாணத்துச் சத்தியாக்கிரகம் (1961) ஆகியவற்றில் முன்னணித்தொண்டராக விளக்கினர். இயக்கத்தின் பல தலைவர்கட்கும் அறிமுகமான இவர் இ. த. அ. க. அராலி தெற்கு கிளையின் முக்கிய உறுப்பினருமாவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைசி 10 நாட்கள் பார்க்கத் தவறாதீர்கள்

சென்ட்ரல் திரையில்

சிவாஜி — ஜெயலலிதா

— நடித்த —

# பட்டிக்காடா பட்டணமா

17ம் திகதி முதல்

சென்னையில் 100 நாட்களுக்கு மேல் ஓடிய திரையோவியம்!

சிவாஜிகணேசன், சாரதா,
விஜயநிர்மலா, வீ. கே. ராமசாமி,
மனோரமா, நடித்த

# ஞான ஒளி

நாமும் கொஞ்சம் சரித்திரம் படித்தோம்
ராஜா ராணி நம்மைப்போல் இல்லை
தானே பார்த்து தானே ரசித்த
தானே புகழ்ந்தால் தாங்காது தாயே
சினிமா உலகை வாழவிடப்பா
என்னே பூர்வ ஜென்மம்

5 வது வாரம்

சேரன், சோழன் திரும்பவும் வருவான்
காதல் சோகம் கல்லானபொல்லாம்
அங்கே பேசு எர்மிடம் வேண்டாம்
நானே கரும்பு நீயோ எறும்பு
அண்ணே! இது ஒரு நகைச்சுவை சித்திரம்

# செல்லமகால்

(ஈஸ்ட்மன் கலர்)

ரவிச்சந்திரன்-காஞ்சனா,
நாகேஷ் ரமாபிரபா,
மூர்த்தி மாலி
விஜயசந்திரிகா நடித்த-
சித்ராலயாவின்



# உத்தரவின்றி உள்ளே வா

5-வது ஜனத்திரள் வாரம்!



கெபிட்டல் பிளாசா
வெலிங்டன் லிடோ
(யாழ்ப்பாணம்)

நடிகர் திலகம் சிவாஜிகணேசன், வாணிஸ்ரீ,
பாலாஜி, சாந்தகுமாரி, நாகேஷ், பண்டரிபாய், சுந்தரராஜன்,
—நடித்த—
விஜயா சுரேஸ் கம்பைன்ஸ்

# வசந்தமாளிகை (ஈஸ்ட்மென் கலர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்கா மாவத்தை
194 ஏ. இலக்கத்தில் 1973ம் வருடம் பெப்ருவரி மாதம் 11ம் திகதி ஞாயிற்றுக் கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.